பக்கங்கள்: 20

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 05 ஞாயிற்றுக்கிழமை 19.01.2020 கதிர் 75

**இனி து ரகசியம் அல்ல!**

இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் திடீரெனக் கொழும்பு வந்துதிரும்பியமைதான் நேற்றுப் பகல் தென்னிலங்கை அரசியலின் பிரதான பேசு பொருளாக இருந்தது.

உண்மைதான். பக்கம் 02

### இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான

# அஜித் டோவல் திடீரென வந்தார் கோட்டாவுடன் முக்கிய சந்திப்பு

### பல முக்கிய விடயங்கள் குறித்துப் பேச்சு

கொழும்பு, ஜன. 19

இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் நேற்று முன்னறிவிப்பு ஏதுமின்றித் திடீரெனக் கொழும்புக்கு வருகை தந்தார். நேற்றுக் காலை கொழும்பு வந்த அவர் உடனடியாகவே ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷவைச் சந்தித்து முக்கிய பேச்சு நடத்தினார்.

முதலில் இலங்கை ஜனாதிபதியுடன் உதவியாளர்களின்றித் தனித்துப் பேச்சு நடத்திய இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பின்னர் இருதரப்பு அதிகாரிகள் சகிதம் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். பக்கம் 03



## ஏப்ரல் 25 பொதுத் தேர்தல்!

கொழும்பு, ஜன. 19

ஏப்ரல் 25 அல்லது 26ஆம் திகதி பொதுத்தேர்தல் நடத்தப்படும் என அமைச்சர் விமல் வீரவன்ஸ பக்கம் 03

## சமூகச் சீர்கேட்டுக்கு எதிராக கிளிநொச்சியில் போராட்டம்



கிளிநொச்சி, ஜன. 19

சமூகச் சீர்கேட்டுச் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி – விநாயகபுரம் மக்கள் நேற்று மாலை பக்கம் 03

## தமிழருக்கு துரோகம் இழைக்கின்றது சு.க.

### சிவமோகன் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா, ஜன. 19

19ஆவது திருத்தத்தை அழிக்க மைத்திரியின் கட்சி (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி) எடுக்கும் முடிவு தமிழர்களுக்கான துரோகமாகும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார். பக்கம் 03

## இன்று அவசரமாகக் கூடுகிறது ரெலோ

வவுனியா, ஜன.19

சில அவசர முடிவுகளை எடுப்பதற்காக ரெலோவின் (ஈழ விடுதலை இயக்கத்தின்) அரசியல் குழு, தலைமைக்குழு ஆகியன இன்று வவுனியாவில் பக்கம் 03

## சந்தேகநபர் மீது மோசமான தாக்குதல்; ஊர்காவற்றுறை எஸ்.ஐக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன.19

பொலிஸ் நிலையத் தடுப்புக் காவலில் வைத்து சந்தேக நபரொருவரை மிக மோசமாகத் தாக்கியவர் எனக் கூறப்படும் சப் இன்ஸ்பெக்டர் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய் பக்கம் 03

## தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்குங்கள்!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், ஜன. 19

தென்னிலங்கையில் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பியினருக்குப் பொதுமன்னிப்பு, தமிழ் மக்களைப் படுகொலை செய்த இராணுவ அதிகாரிக்குப் பொது மன்னிப்பு என்றால் அப் பக்கம் 03

## சி.ஐ.டி. பணிப்பாளரின் கீழ் வந்த பயங்கரவாத விசாரணைப் பிரிவு

கொழும்பு, ஜன. 19

பயங்கரவாத விசாரணைப் பிரிவு, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நுவன் வெத பக்கம் 03

## கிராம சேவையாளர்களை கண்காணிக்க சி.ஐ.டியினர்

### கோட்டாபய அரசு புதிய யுக்தி

கொழும்பு, ஜன.19

ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கவுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம், பக்கம் 03

## தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள் யாழ். நகரில் 2 கடைகளில் சிக்கின!



யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை நிலையங்களிலிருந்து சுமார் 360 கிலோ கிராம் பக்கம் 03

## கூட்டமைப்பின் உழவர் விழாவுக்கு மாட்டுவண்டிலில் வந்தார் மாவை!





யாழ்ப்பாணம், ஜன.19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் தமிழர் மரபுவழி உழவர் திருவிழாவும் பட்டிப் பொங்கல் நிகழ்வும் நேற்றுச் சாவகச்சேரியில் கோலாகலமாக இடம்பெற்றன. சங்கத்தானை முருகன் ஆலய முன்றிலில் இருந்து விருந்தினர்கள் அழைக்கப்பட்டு பக்கம் 03

காலைக்கதிர்
Kalaikathir



# மேன்முறையீட்டு நீதிமன்றில் தமிழ் அரசியல் கைதி ஒருவர் தனக்குத் தானே முன்னிலையாகி தமிழில் வாதிட அனுமதி!

கனகசபை தேவதாசன் என்ற தமிழ் அரசியல் கைதி தான் தொடர்பான வழக்கில் தனக்குத்தானே தமிழ் மொழியில் வாதாட கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் இதுவரை சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலேயே வழக்கு விசாரணைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது,

இப்போது முதல் தடவையாக தமிழிலும் விசாரணை நடைபெறப் போகின்றது.

கடந்த 2008 ஆம் ஆண்டு கனகசபை தேவதாசன் (வயது 63) என்பவர் கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து, 6 கைக்குண்டுகளைத் தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார். அவசரகால சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கின் போது தனக்குத்தானே அவர் தமிழில் வாதாடியிருந்தார்.

இந்த நிலையில் 2018 – நவம்பர் 18 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றம் அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தது.

இந்த தீர்ப்பிற்கு எதிராக அவர் மேன்முறையீடு செய்தார். கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அந்த வழக்கில் தனக்குத் தானே தமிழ் மொழியில் வாதாடவும் அவர் அனுமதி கோரியிருந்தார்.

இதற்கமைய கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அவரது முறையீட்டு மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. கடந்த 13 ஆம் திகதி நடந்த இந்த வழக்கின் போது, தனக்குத்தானே அவர் வாதாட முனைவது ஏன் எனவும், சட்டத்தரணியொரு வரை நியமிக்க முடியும்தானே எனவும் நீதிமன்றம் வினவியது,

அரசமைப்பில் இது தொடர்பாக வழங்கப்பட்டஉள்ள உரிமையைத் தாம் அனுபவிக்க விரும்புகிறார் எனத் தேவதாசன் பதிலளித்தார்.


அதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் வரும் மார்ச் 30 ஆம் திகதி வழக்கு விசாரணை இடம்பெறுமெனத் திகதியிட்டது. அன்றைய தினம் தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பாளர்கள் பிரசன்னமாகியிருக்க ஏற்பாடு செய்யப்படவுள்ளது,

## கூட்டமைப்பின் பொங்கல்











## சீனக் கப்பல் கொழும்பில்!



2020 ஜனவரி 3 ஆம் திகதி இலங்கைக்கு வந்த சீன மக்கள் குடியரசின் கடல்சார் ஆராய்ச்சி கப்பலான சியாங் யோங் ஹாங் 06 தற்போது இலங்கையின் கடற்பரப்பு மற்றும் நீர்நிலைகளில் நுண்ணுயிர் வாழ்க்கை குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

உயிர் வேதியியலாளர்கள் மற்றும் வேதியியலாளர்கள் குழு இந்த ஆராய்ச்சியில் பங்கேற்றுள்ளதுடன், இலங்கை கடற்படையின் ஹைட்ரோகிராஃபிக் அதிகாரியும் கப்பலுடன் ஹைட்ரோகிராஃபிக் நடவடிக்கைகளுக்காக இணைத்துள்ளார். மேலும், அவர் ஒரு பார்வையாளராக ஆராய்ச்சியில் பங்கேற்கிறார்.

தேசிய நீர்வள வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், ருகுணு பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்தோரும் மற்றும் இலங்கையின் பெருங்கடல் பல்கலைக்கழக விஞ்ஞானிகளும் இந்த ஆராய்ச்சியில் இணைந்துள்ளனர்.

ஆராய்ச்சி நடவடிக்கைகள் முடிந்ததும், சியாங் யாங் ஹாங் 06 இன்று இங்கிருந்து புறப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்தவாரம் இந்தியாவில் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலாளர்களுள் ஒருவரும் இந்தியப் பிரதமரின் சீனா உட்பட்ட நாடுகள் தொடர்பான வெளிவிவகார விடயங்களின் உதவியாளருமான ராம் யாதவ் கொழும்புக்கு வந்து இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துவிட்டுத் திரும்பிய கையோடு – ஒரு வார காலத்தில் – பிரதமர் மோடியின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் கொழும்பு வந்திருக்கின்றார். மூடிய அறைக்குள் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தனியாக மந்திராலோசனை நடத்தியிருக்கின்றார்.

பெயர்தான் ஆலோசகர் பதவி. ஆனால் இந்தியாவில் பிரதமரின் தேசிய ஆலோசகர் பதவி என்பது இராஜதந்திர ரீதியில் மத்திய அரசின் கபினட் அமைச்சர் பதவிக்கு சட்டரீதியாக ஒப்பானது. நாட்டின் பிரதமர் சார்பில் யுத்தப் பிரகடனத்துக்கு அல்லது சமாதானத்துக்கான தீர்மானத்தை எடுத்து அறிவிக்கும் அளவுக்குத் தகுதி வாய்ந்தது. (காங்கிரஸ் அரசில் கே.ஆர். நாராயணன் இந்தப் பதவியில் நீண்டகாலம் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.)

அத்தகைய ஓர் அதிகாரி – சத்தம் சந்தடியின்றி – புதுடில்லியிலிருந்து கொழும்புக்குக் காலையில் வந்து உடன் திரும்பும் – அவசர 'விசிட்' ஒன்றை மேற்கொண்டிருக்கின்றமை மிக முக்கியமான விடயம்.

அதுவும், சீன வெளிவிவகார அமைச்சர் கொழும்பு வந்துதிரும்பியுள்ள சூழலில் –

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சீனாவுக்கு விரைவில் விஜயம் ஒன்றை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படும் பின்னணியில் –

இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலின் திடீர் விஜயம் முக்கியத்துவம் பெறுகின்றது.

அண்மையில் கொழும்பு வந்த சீன வெளிவிவகார அமைச்சரிடம், சீனாவுக்கு இலங்கை திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகை தொடர்பில் சில கால தாமத சகாயம் காட்டும்படி இலங்கை ஜனாதிபதியும் கேட்டுக்கொண்டார் என்றும் –

அவ்வாறு சகாயம் காட்டுவதற்கு இணங்கிய சீனத் தரப்பு, அதற்குக் கைம்மாறாகத் தனக்கு சாதகமாக சில விடயங்களைக் கோரியது என்றும் –

அது தொடர்பாக அதிருப்தியுற்ற புதுடில்லி, அவ்விடயம் குறித்துக் கொழும்புடன் நேரில் பேசி சிலவிடயங்களைக் கொழும்புக்குத் தெரியப்படுத்தும் நோக்கில் அஜித் டோவலை அனுப்பி வைத்தது என்றும் –

சில ராஜதந்திர வட்டாரங்கள் நேற்றிரவு தகவல் வெளியிட்டன. இதுபற்றிய விவரமான விடயங்கள் ஓரிரு நாள்களில் அம்பலமாகும் என எதிர்பார்க்கலாம் என்றும் அவ்வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன.

இதே அஜித் டோவல் 2014 இறுதியில் – அப்போது ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட சமயத்திலும் – இலங்கை வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அறிவிக்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய பொது எதிரணியின் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவின் பெயர் வெளிப்படுத்தப்பட்டபோது அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெரும் சீற்றமடைந்தார்.

கொழும்பில் இந்தியத் தூதரகத்தில் பணியாற்றிய ஒரு 'றோ' அதிகாரியே எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து அதுவரை தனது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேனவைத் தமக்கு எதிரான பொது எதிரணி வேட்பாளராகக் களமிறக்கும் சதிச் செயலை பின்னணியில் நின்று இயக்கினார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லிக்கு அப்போது காட்டமான எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சீற்றமான அந்தச் செய்தியை அடுத்து இப்போது வந்தமை போல ஒரு திடீர் 'விசிட்' அடித்தார் இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் டோவல்.

மஹிந்தரைச் சந்தித்துப் பேசினார். சம்பந்தப்பட்ட 'றோ' அதிகாரியைக் கொழும்பில் இருந்து விலக்கி, நாட்டுக்குத் திருப்பி அழைப்பதாக உறுதி கூறினார். அந்த அதிகாரி ஏற்கனவே இலங்கையில் தனக்குரிய மூன்று வருட கால சேவையைப் பூர்த்தி செய்திருந்த நிலையில் புதுடில்லி திரும்ப இருந்தவர். எனினும் இலங்கை ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு, வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும் வரை கொழும்பில் இருந்து செயற்பட்ட அந்தத் தமிழ் அதிகாரி தேர்தல் வாக்களிப்புக்கு முன்னரே புதுடில்லியின் அறிவுறுத்தலுக்கமைய இந்தியா திரும்பினார். அவரது இடத்துக்கு வேறு ஒரு வடநாட்டு அதிகாரி கடமைக்கு வந்தார்.

அப்போது கொழும்பின் – இங்குள்ள ஜனாதிபதியின் – சீற்றத்தைத்தணித்து சுமுகநிலையை ஏற்படுத்துவதற்கு டோவல் வந்தார்.

இப்போது விடயம் தலைகீழ் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். தற்போது சீற்றம் புதுடில்லியின் பக்கத்தில்.

அப்போது பதவியின் அந்தத்தில் தேர்தலை எதிர்நோக்கியிருந்த இலங்கை ஜனாதிபதியின் சீற்றத்தைத் தணிக்க அவர் வந்தார்.

இப்போது புதிதாகப் பதவியேற்றிருக்கும் இலங்கையின் புதிய ஜனாதிபதிக்கு புதுடில்லியின் சீற்றத்தைத் தெரியப்படுத்த அவர் வந்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

அவரது கொழும்பு விஜயத்தின் உண்மையான நோக்கம் – உள்சூக்குமம் – ஓரிரு தினங்களில் விவரமாக – நம்பிக்கையானதாக – வெளியாகும் என நம்பப்படுகின்றது. அப்போது அவற்றை வாசகர்களுக்குப் பகிரலாம் என நம்புகிறேன். அதுவரைப் பொறுத்தருள்க!

- மின்னல் -

## அஜித் டோவல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பாதுகாப்பு, உளவுத் துறை பகிர்வு, கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை வளர்ப்பது தொடர்பான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது உட்பட முக்கிய அம்சங்கள் குறித்து இங்கு பேச்சு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை பாதுகாப்புப் படையினர் இரகசியத் தகவல்களை ஒன்றுதிரட்டும் தொழிநுட்பத்துக்கு இலங்கைக்கு உதவியளிக்க இந்தியா இதன்போது உறுதியளித்துள்ளது.

நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துதல் தொடர்பாக இதன்போது கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டமையுடன், இருநாட்டு இராணுவத்தினருக்குமிடையே பலமான ஒத்துழைப்புகள், சமுத்திர பாதுகாப்பு, கரையோர பாதுகாப்பு படைகளுக்கிடையிலான புரிந்துணர்வு மற்றும் செயற்பாடுகளை மேம்படுத்துதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை, மாலைதீவு மற்றும் இந்தியாவுக்கிடையிலான சமுத்திர வலயம் தொடர்பான விடயங்களை மீளாய்வு செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய இந்திய பாதுகாப்பு ஆலோசகர், ஏனைய பிராந்திய நாடுகளையும் கண்காணிப்பாளர்களாக இந்த செயற்பாட்டில் இணைத்துக்கொள்ளவேண்டுமென தெரிவித்தார்.

அத்துடன், பாதுகாப்பு உடன்படிக்கைகளையும் பலப்படுத்தும் ஒருநடவடிக்கையாக இலங்கைப் படையினருக்கு தேவையான உபகரணங்களைக்கொள்வனவு செய்வதற்காக 5 கோடி அமெரிக்க டொலர்களை இந்திய அரசு வழங்கவுள்ளது.

மேலும் பூகோள ஒருங்கிணைப்பு மையத்தை அமைப்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள சூழ்நிலையில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் இந்த இலங்கை வருகை இடம்பெற்றுள்ளது. (ஐ)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடுகின்றன.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பற்றிய முடிவுகள் இன்று எடுக்கப்படலாம் எனத் தெரிகிறது.

வேட்பாளர் தெரிவு இன்று இடம்பெறுமெனக் கூறப்பட்டுள்ள போதும், பல மாவட்டங்களில் வேட்பாளர்கள் தீர்மானிக்கப்பட்டுவிட்டனர்.

யாழ் மாவட்டத்தில் கட்சியின் தேசிய அமைப்பாளர் சுரேன் களமிறங்கவுள்ளார். இது கட்சியின் சில மட்டத்தில் அதிருப்தியார்களை உருவாக்கியுள்ளது என்றும் கூறப்பட்டது.

இதேவேளை ரெலோவின் அம்பாறை மாவட்டக்கூட்டம் அம்பாறையில் நடந்தது. இதில் கோடீஸ்வரன் எம்.பி. கலந்துகொள்ளவில்லை. ரெலோசாரில் போட்டியிட்டு எம்.பியானஅவர் இப்போது ரெலோவுடன் சேர்ந்து இயங்குவது இல்லை எனக்குறிப்பிட்டு ரெலோ உறுப்பினர்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

2015ஆம் ஆண்டில் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்குவதற்கு தமிழர்கள் பெரும் பங்களிப்பை செய்திருந்தார்கள். அந்தவகையில் சுதந்திர ஆணைக்குழுக்களை நிறுவக்கூடிய 19ஆவது திருத்தச் சட்டத்தை நாங்கள் கொண்டு வந்திருந்தோம்.

மக்களும் சுமூகமான வாழ்வை குறிப்பிட்ட காலம் வாழ்ந்திருந்தார்கள். தற்போது அரசைப் பொறுப்பெடுத்துள்ள ராஜபக்ஷ குடும்பம் 19ஆவது திருத்தத்தினை இல்லாமல் செய்ய முற்படுகின்றது.

அதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முண்டு கொடுப்பதாக இருந்தால் மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்களின் வாக்குகளில் வந்து அனுபவித்த விடயங்கள் அனைத்தும் தவறான விடயமாக அமையும். இது தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் மக்களின் தீர்வு விடயம் மட்டுமல்லாது உரிமை விடயத்திலும் முக்கிய கரிசனை கொள்ளும். எந்த அரசு வந்தாலும் நாம் அவர்களுடன் சுமூகமாக இணங்கி தமிழர்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுப்போம்.

இந்நிலையில் 1948இல் இருந்து எந்த அரசும் தமிழ் மக்களுக்கான தீர்வை நோக்கி வரவில்லை. இன்று பேரினவாதம் தலைதூக்கி நிற்கின்றது. முடிவுகளும் இனவாத சிந்தனையில் வந்துகொண்டிருக்கின்றன. எனவே எந்தவொரு அரசாங்கமும் இனவாத சிந்தனையில் இருந்து வெளியில் வந்து ஒட்டுமொத்த இலங்கை வாழ் மக்களுக்கான தீர்வை வழங்க முற்படுவார்கள் என நம்ப முடியாதுள்ளது – என்றார். (ஐ)

## தடைசெய்யப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடையுள்ள தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள் கைப்பற்றப்பட்டன.

யாழ்ப்பாணம் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களின் அடிப்படையில் நேற்றுச் சனிக்கிழமை மதியம் யாழ். நகரப் பகுதிகளில் உள்ள கடற்தொழில் உபகரணங்கள் விற்பனை செய்யும் நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டனர்.

இதன்போது ஒரு கடையில் இருந்து தடை செய்யப்பட்ட 30 கிலோ தங்கூசி வலையும் மற்றைய கடையில் இருந்து சுமார் 330 கிலோ கிராம் தங்கூசி வலையும் மீட்கப்பட்டுள்ளன.

அதனை அடுத்து கடைகளின் உரிமையாளர்கள் இருவரையும் விசேட அதிரடிப்படையினர் கைது செய்து கடற்தொழில், நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தமையுடன், மீட்கப்பட்ட வலைகளையும் கையளித்தனர்.

தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கடை உரிமையாளர்களை வலைகளுடன் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் கடற்தொழில், நீரியல்வளத்துறை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர். (ஜ-07)

## தமிழ் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாவிகளாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பை ஏன் வழங்க முடியாது எனக் கேள்வியெழுப்பியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, அவர்களுக்கும் பொது மன்னிப்பை வழங்கி விடுவிக்கவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

அனுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்றுச் சென்று பார்வையிட்டு கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக கட்சியின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி கே.சுகாஸ் ஊடகங்களுக்குக் கருத்துதெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைச் சந்தித்திருந்தோம். இதன்போது தங்கள் நிலைமைகளை மன வேதனையுடன் எங்களிடம் அவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். உண்மையில் அவர்களின் நிலைமை படுமோசமாகவும் வேதனைக்குரியதாகவும்தான் காணப்படுகின்றது.

குறிப்பாக 10 ஆண்டுகள் கடந்தும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படாமலும் அதேநேரம் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் கூட இழுத்தடிக்கப்படுகின்ற போக்கில் செல்கின்ற நிலைமையிலும் அவர்கள் வாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

எங்கள் ஊடாக அவர்கள் சில கோரிக்கைகளை அரசிடம் முன்வைத்திருக்கின்றனர். அவ்வாறு அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளில் பிரதான கோரிக்கை என்னவெனில் அண்மையில் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய தமிழ் மக்களைப் படுகொலை செய்த இராணுவ அதிகாரியை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்திருக்கின்றார். அப்படியான சட்ட ஏற்பாடுகள் ஜனாதிபதிக்கு இருக்கின்ற போது அப்பாவியான தங்களை ஏன் ஜனாதிபதி விடுதலை செய்யக்கூடாது என்று அவர்கள் கேட்டனர்.

அதிலும் குறிப்பாக சுலக்சன் என்ற அரசியல் கைதி 11 ஆண்டுகள் இந்தச் சிறைச்சாலையில் இருக்கின்றார். இவரைவிட ஏனைய 11 கைதிகளும் பல்லாண்டுகாலமாக சிறைகளில் வாடுகின்றனர். எந்தவிதமான அடிப்படை ஆதாரங்களும் இல்லாமல் போலிக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அவர்கள் எங்களிடம் மன்றாடிய விடயம் என்னவெனில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் உயர் நிலையில் இருந்த கருணா அம்மான் போன்றவர்கள் சுதந்திரமாகத் திரிகின்றார்கள். ஆனால் அப்பாவிகளான எங்களை ஏன் அரசு சிறைகளில் வைத்திருக்கின்றது? – என்பதுதான்.

இராணுவ அதிகாரியை பொது மன்னிப்பில் விடுவிக்க முடியுமென்றால் எங்களை ஏன் விடுவிக்க முடியாது? இந்த விடயங்களை இலங்கை அரசிடம் தெரிவிக்குமாறு விநயமாக வேண்டியிருக்கிறார்கள். அதற்கமைய இந்த விடயத்தை நாங்கள் ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்துகின்றோம்.

அவ்வாறு விடுதலை வழங்குவதில் ஏதாவது நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றதென்றால் குறைந்தபட்சம் அவர்களை உடனடியாகப் பிணையிலாவது விடுவிக்க வேண்டும். இதுதான் அரசியல் கைதிகள் எங்களூடாக முன்வைத்த கோரிக்கையாக இருக்கிறது. அதற்கமைய நாங்களும் இதனை வெளிப்படுத்துகிறோம். ஆகவே, இலங்கை அரசு உடனடியாக அந்த அரசியல் கைதிகள் விடுவிக்க வேண்டுமென்று கோருகின்றோம் – என்றார். (ஜ-07)

## சந்தேகநபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய சப் இன்ஸ்பெக்டர் ஒருவரே இவ்வாறு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறைப்பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் நபரொருவருடன் முரண்பட்டார் என்னும் குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவரை இந்த சப் இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட பொலிஸ் பிரிவினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத் தடுப்புக் காவலில் வைத்து சப் இன்ஸ்பெக்டர் மிகமோசமாகத் தாக்கியுள்ளார். அதில் கையில் வெடிப்பு ஏற்பட்டுக் குருதி வந்த நிலையிலும் மிக மோசமாகத் தாக்கியுள்ளார்.

சந்தேக நபர் தாக்குதலுக்கு இலக்காகி குருதிக் காயங்கள் ஏற்பட்ட நிலையிலும் அவரை மருத்துவமனையில் அனுமதிக்காது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியுள்ளனர்.

சந்தேக நபரின் உடலில் ஏற்பட்ட காயங்கள் மற்றும் உடல் நிலை குறித்து அவதானித்த நீதிவான், அது தொடர்பில் சந்தேக நபரிடம் வினாவினார். தன்னைப் பொலிஸ் நிலையத் தடுப்புக் காவலில் வைத்து சப் இன்ஸ்பெக்டர் மூர்க்கத்தனமாகத் தாக்கினார் என அவர் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

இதனை அடுத்து சந்தேக நபரை மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்திச் சட்ட வைத்திய அதிகாரியின் முற்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிவான், சப் இன்ஸ்பெக்டர் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார்.

இதேவேளை, மேற்படி சப் இன்ஸ்பெக்டர் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகளைப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் அவரது தனிப்பட்ட ஒழுக்கங்கள் தொடர்பிலும் குற்றம்சாட்டினர். (ஜ-07)

## கிராம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்யும் கிராம உத்தியோகத்தர்களைச் சத்தம் சந்தடியின்றிக் கண்காணிப்பதற்கு புலனாய்வுத் துறை அதிகாரிகளை நியமித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களைத் தேடி நியமிக்குமாறு அரசாங்கம் ஏற்கனவே தெரிவித்திருந்தது.

எனினும் பல்வேறு தனிப்பட்ட காரணங்களுக்காக தகுதியற்றவர்களை கிராம உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யலாம் எனச் செய்திகள் வெளியாகி உள்ளன.

இதனையடுத்தே கிராம உத்தியோகத்தர்களைக்கண்காணிக்க புலனாய்வு அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்கள் என்று கூறப்படுகிறது.

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டுவண்டி மற்றும் இசை வாத்தியங்களுடன் நடைபவனி ஆரம்பமாகி சாவகச்சேரி மத்திய பஸ் நிலையத்தைச் சென்றடைந்தது. அங்கு உழவர் திருவிழா கோலாகலமாக நடைபெற்றது.

சாவகச்சேரி மத்திய பஸ் நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கோபூஜை, மங்கள இசை, பொங்கல், கௌரவிப்பு நிகழ்வு, நடன நிகழ்ச்சிகள், கவியரங்கம் மற்றும் இன்னிசை கச்சேரி ஆகியன இடம்பெற்றன.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்துகொண்டார் .

சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான சித்தார்த்தன், சரவணபவன், சுமந்திரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-07)

## ஏப்ரல் 25...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

மன்னாருக்கு நேற்று பயணம் மேற்கொண்டபோது அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மார்ச் மாதம் 03ஆம் திகதிக்குப் பின் நாடாளுமன்றத்தைக் கலைத்து தற்போதைய மக்களின் பிரதிநிதித்துவத்தைப் பிரதிபலிக்கின்ற நாடாளுமன்றத்தை அமைப்போம். ஏப்ரல் 25 அல்லது 26ஆம் திகதியில் பொதுத் தேர்தல் நடத்தப்படும். பொதுத் தேர்தல் ஊடாக ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன அரசு அதிகாரம் மிக்க நாடாளுமன்றத்தை அமைக்கும் – என்றார். (ஐ)

## சமூகச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

4 மணியளவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். விநாயகபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் பிரதேசத்தில் இயங்கும் விடுதியை தடை செய்யவும் அதற்கெதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளக் கோரியுமே இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இந்தச் சட்டவிரோத செயற்பாட்டைக் கட்டுப்படுத்தித் தமது பிரதேசத்தைப் பாதுகாத்துத் தருமாறும், பிரதேசத்தின் நன்மதிப்பை மீளப்பெற்றுத் தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ)

## சி.ஐ.டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவீ செனவிரத்ன ஓய்வு பெற்ற பின்னர் அந்தப் பதவி வெற்றிடத்துக்காக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, பயங்கரவாத விசாரணைப் பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் நுவன் வெதசிங்கவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ரணிலின் தலைக்கு மேல் கத்தி

தமது அரசியல் வாழ்வு, எதிர்காலம் ஆகியன தொடர்பாகத் தீர்க்கமான ஒரு முடிவை எடுக்க வேண்டிய ஓர் இக்கட்டான கட்டத்தில் சிக்கியிருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

கட்சியினதும் நாட்டினதும் நலனுக்காக 2010 ஜனாதிபதித் தேர்தலிலும், 2015 ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடுவதற்குத் தமக்கு இருந்த உரிமையை பொதுவேட்பாளர்களான சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு விட்டுக் கொடுத்தவர் ரணில்.

ஆனால் 2019 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐ.தே.கட்சியின் தலைவராக இருந்து கொண்டு அவர் முயற்சித்த போது, அவரது கட்சியினராலும், அவர் தம்மோடு கூட்டுச் சேர்த்து வைத்திருந்த கட்சிகளின் தலைவர்களாலும் அந்த வாய்ப்பு அவரிடமிருந்து தட்டிப் பறிக்கப்பட்டது.

இப்போது இருபத்தியைந்து வருடங்களுக்கு மேல் தாம் கட்டிக்காத்து வந்த ஐ.தே.கட்சியின் தலைமைப் பதவியையும் வல்வந்தமாக அவரிடமிருந்து 'அடித்துப் பறிக்கும்' முயற்சி அதே தரப்புகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை கண்கூடு.

கட்சியினுடைய யாப்பின்படி கட்சியின் மாநில மாநாட்டில் – சம்மேளனத்தில் – தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார் ரணில் விக்கிரமசிங்க. கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குச் சற்று முன்னர் நடந்த இந்த மாநாட்டில் 2024 வரைத் தலைவராக ரணில் தெரிவு செய்யப்பட்டார்.

ஆனால், கட்சியின் நாடாளுமன்றக் குழுவில் கணிசமானோர் ஒன்று கூடி அவரைப் பதவி விலகி – கட்சித் தலைமைப் பதவியையும் – சஜித் பிரேமதாஸவிடம் கையளிக்குமாறு வற்புறுத்துகின்றனர். ஏதிர்க்கட்சித் தலைவர் பதவியை ரணிலிடமிருந்து பலவந்தமாகப் 'பிடுங்கி' கையளிக்க எடுத்த அதே 'சதித்திட்டம்' இதிலும் பின்பற்றப்படுவது வெளிப்படையாகத் தெரிகின்றது.

ஆனால், இந்தப் பதவி – கட்சித் தலைமைப் பதவி – விவகாரம், எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரத்தில் இருந்து சட்ட மற்றும் தார்மீக ரீதியில் வித்தியாசமானது.

ஏதிர்க்கட்சித் தலைவர் அல்லது கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி தொடர்பில் கட்சியின் யாப்பு என்ன கூறினாலும் அது நாடாளுமன்றத்தையோ, சபாநாயகரையோ கட்டுப்படுத்தாது.

ஒரு கூட்டின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அல்லது அந்தக் குழுவின் சார்பில் எதிர்க் கட்சிகளின் தலைவராக இருக்கப் போகின்றவர்கள் விடயத்தில் ஒரு கட்சியின் யாப்பை கவனத்தில் கொள்ள வேண்டிய தேவை சபாநாயகருக்கு இல்லை.

எந்தத் தரப்பின் – அல்லது எந்தக் குழுவின் – தலைவரை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டியிருக்கின்றதோ அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவில் அதிக வரவேற்பையும், செல்வாக்கையும், ஆதரவையும் பெற்ற ஒருவரையே அப்பதவிக்கு சபாநாயகர் தெரிவு செய்வார்; தெரிவு செய்யவேண்டும்.

அந்த வகையில் ஐ.தே.க. தலைமையிலான நாடாளுமன்றக் கூட்டமைப்பில் அதிக செல்வாக்கையும், ஆதரவையும் பெற்றவர் எனத் தம்மைக் காட்டிக் கொள்ளும் சஜித் பிரேமதாஸவை அந்தப் பதவிக்கு நியமிப்பதற்கு ரணில் இணங்கினார். – அதுவும் தமது ஐ.தே.கட்சியின் யாப்புக்கு மாறான முறையில் அது நடந்த போதும், அதை ரணில் விட்டுக் கொடுத்தார்.

கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தால் அவரே நாடாளுமன்றக் குழுத் தலைவராக இருக்க வேண்டும் என்பது ஐ.தே.க. யாப்பு விதி. அதன்படி பார்த்தால் எதிர்க்கட்சித் தலைவர் பதவிகூட ரணிலுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனாலும் –

ஐ.தே.கட்சியின் யாப்பு சபாநாயகர் பதவியில் இருப்பவரைக் கட்டுப்படுத்தாது என்பதாலும் –

ஐ.தே.முன்னணி தரப்பில் உள்ள எம்.பிக்களில் கணிசமானோரின் ஆதரவு சஜித் பிரேமதாஸவுக்கு என்பதாலும் –

அந்த விடயத்தில் விட்டுக் கொடுத்துக் கட்சியைக் காப்பாற்றினர் ரணில்.

ஆனால், இப்போது கட்சித் தலைவர் பதவியிலிருந்தும், ரணிலை விலகச் செல்லி வற்புறுத்துவது கட்சி யாப்புக்கு முற்றிலும் விரோதமானாதாகும்.

கட்சியின் யாப்புப்படி 2024 வரை ரணிலே தலைவர். கட்சியின் கடைசி மாநில மாநாடு அந்த அதிகாரத்தை அவருக்கு வழங்கியுள்ளது. நாடாளுமன்றில் கட்சியின் பெரும்பாலானோரின் ஆதரவைக் காட்டி அதனடிப்படையில் கட்சித் தலைவர் பதவியிலிருந்து ரணிலை விலகுமாறு வலியுறுத்துவது சட்ட விரோதமானதாகும். கட்சித் தலைவரைத் தீர்மானிக்கு அதிகாரம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே உரியதன்று. முழுக் கட்சிக்குமுரியது.

ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் தமக்கிருக்கும் செல்வாக்கை மட்டும் பயன்படுத்தி அதனைத் தட்டிப் பறிப்பதற்கு சஜித் பிரேமதாஸ கடுமையாக – தீவிரமாக – முயற்சிக்கின்றார். அதற்குக் கூட்டுக் கட்சிகளின் தலைவர்களும் அவருக்கு பின்னால் அணி வகுத்துள்ளனர்.

இந்த நெருக்கடியை – மோசமான நெருக்குவார நிலைமையை – ரணில் எப்படி எதிர்கொண்டு மீளப் போகின்றார்?

அடுத்து வரும் வாரங்களில் இந்த விடயத்தில் தீர்க்கமான ஒரு முடிவு எட்டப்பட்டு விடலாம் என எதிர்பார்க்கலாம்.

# அதிகாரம் உள்ள நாடாளுமன்றை அமைப்பதே எங்களது நோக்கம்

## மன்னாரில் கூறினார் அமைச்சர் விமல்



மன்னார், ஜன.19

அதிகாரம் உள்ள நாடாளுமன்றம் ஒன்றை அமைப்பதே எமது நோக்கம் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

மன்னாருக்கு நேற்றுச் சனிக்கிழமை காலை விஜயம் செய்த அமைச்சர், மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்துக்குச் சென்று பார்வையிட்டமையோடு, அங்குள்ள பிரச்சினைகள், குறைபாடுகளைக் கேட்டறிந்தார்.

அதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தில் உள்ள அரச நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளைக் கண்காணித்து அவற்றை அபிவிருத்தி செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதே எனது அமைச்சின் நோக்கம்.

அதன் அடிப்படையில் மன்னாரில் உள்ள மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்தின் உப்பு உற்பத்தியானது நாட்டின் சந்தைக்கும், பாவனையாளர்களுக்குமான உப்பை உற்பத்தி செய்கின்றது.

இந்த உப்பு உற்பத்தி நிலையத்தை மென்மேலும் அபிவிருத்தி செய்வதன் மூலம் இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

நாட்டிற்கு தேவையான வளங்களை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்வதுடன் வெளிநாட்டிடம் எதிர்பார்க்காமல் இருப்பதே எமது நோக்கம்.

தற்போதைய நாடாளுமன்றம் காலவதியாகிவிட்டது. அதனால் நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. மார்ச் மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்படுகின்றது. கலைக்கப்பட்ட பின் இடம்பெறுகின்ற தேர்தலில் நாம் வெற்றி பெறுவோம். அதன் போது பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

எனவே அதிகாரம் உள்ள நாடாளுமன்றம் ஒன்றை அமைப்பதே எமது நோக்கம். அதிகாரம் உள்ள நாடாளுமன்றம் ஒன்றை நாம் அமைக்க மாட்டோம் என முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கூறுகின்றார். ஆனால் அதிகாரம் உள்ள நாடாளுமன்றம் ஒன்றை அமைக்கின்ற போது ரிஷாத் பதியுதீன் அதனைப் பார்ப்பார் – என்றார். (ஐ)

# வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்தது ஈ.பி.ஆர்.எல்.எவ்.

யாழ்ப்பாணம், ஜன. 19

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸுக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் மற்றும் கட்சியின் செயலாளரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் வடக்கு மாகாணத்தில் நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் காணிப் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது

இதற்கு பதிலளித்த வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் பல்வேறுபட்ட காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நீதிபதி தலைமையில் மூவர் அடங்கிய ஆணைக்குழு ஒன்று விரைவில் நியமிக்கப்பட இருக்கின்றது எனவும், அதனூடாக பொதுமக்கள் தமக்கு இருக்கும் பல்வேறுபட்ட காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்றும் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரிய வளப் பங்கீட்டில் (ஆசிரியர் சமப்படுத்தல்) பாரிய குறைபாடுகள் நிலவுகின்றது எனவும், குறிப்பாக கிராமப்புறத்தில் உள்ள பாடசாலைகளுக்கு ஆரம்ப, கனிஷ்ட, உயர்தரப் பிரிவுகளுக்கு ஆசிரியப் பற்றாக்குறை காணப்படுகிறது எனவும், உதாரணமாக செட்டிகுளம் கோட்டப் பாடசாலைகளில் 94 ஆசியரியர்களுக்கான வெற்றிடமும்,வவுனியா வடக்கு கல்வி வலயத்தில்158 ஆசிரிய வெற்றிடம் காணப்படுகின்றன எனவும், இடமாற்றம் பெற்றுச் செல்லுகின்ற ஆசிரியர்களுக்கு பதிலீடாக ஆசிரியர்கள் மீள்நியமனம் செய்வதில் பல நெருக்கடிகள் இருக்கின்றன எனவும், இதனால் மாணவர்களுடைய கல்வியில் இவ்விடயம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது எனவும் ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. இதற்கு ஆளுநர் உரிய நடவடிக்கை எடுப்பார் எனச் சந்திப்பில் கலந்து கொண்டவர்களிடம் உறுதியளித்தார்.

வடக்கு மாகாணத்தில் சுத்தமான குடிதண்ணீர்த் தேவைக்கும் விவசாயத்துக்கும் புதிய நீர்தேக்கங்களை உருவாக்குவதைப் பற்றி இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக மன்னார் மாவட்ட விவசாயிகளினால் நீண்டகாலக் கோரிக்கையான கூராய் ஆற்று நீரை மறித்து நெற் செய்கைக்கு பயன்படுத்துவது,வவுனியா மாவட்டத்தில் உள்ள பறங்கியாற்றின் மேலதிக நீரை 14 குளங்களில் சேமித்து விவசாயத்துக்குப் பயன்படுத்துவது, யாழ். குடாநாட்டில் இருக்கும் சிறிய குளங்களைப் புனரமைப்புச் செய்தல் மற்றும் வடக்கு மாகாணத்தில் இருக்கக் கூடிய நீர்நிலைகளை இனங்கண்டு புனர்நிர்மாணம் செய்வது ஆகியன தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

# சீனாவிடமிருந்து விமானங்களை கொள்வனவு செய்ய அரசு முடிவு

கொழும்பு, ஜன. 19

சீனாவிடமிருந்து வை.12 ரக விமானங்கள் இரண்டை அரசு கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விமானங்களை 60 லட்சம் டொலர்கள் செலவில் இலங்கை அரசு கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை அண்மையில் ஹப்புத்தளைப் பகுதியில் உடைந்து விழுந்து விபத்துக்குள்ளான விமானம் கடந்த 30 வருடம் பழைமையான வை.12 ரக விமானம் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விமானம் சீனாவின் ஹெபின் நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது. இந்நிலையிலேயே சீனாவிடமிருந்து வை.12 ரக விமானங்களை அரசு கொள்வனவு செய்யவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

**நாளை 20.01.2020 – திங்கட்கிழமை**

நட்சத்திரம்: அனுசம் பி.இ 1.49 வரை
திதி : ஏகாதசி பி.இ 4.19 வரை

இராகுகாலம் : 8.05 – 9.35
சுப நேரம் : 12.35 – 2.05

# தமிழ் பேசும் எம்.பிக்களை குறைக்க கோட்டா அரசு சதி!

## ரிஷாத் பதியுதீன் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 19

தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரிக்கவும் தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் குறைப்பதற்குமான சதியை புதிய அரசின் முகவர்கள் மாவட்ட ரீதியாகச் செய்து வருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிறுபான்மை மக்கள் சிந்தித்து வாக்களிக்கவேண்டிய ஒரு தேர்தலாக வரும் பொதுத் தேர்தல் இருக்கின்றது. புதிய அரசின் வருகையோடு இனவாதத்தையும் மதவாதத்தையும் கக்கி அதனை மூலதனமாகக் கொண்டு அரசியல் செய்கின்றவர்கள், சிறுபான்மையினருக்கான பல்லாண்டு காலமாக இருந்து வருகின்ற உரிமைகளைக் கூட இல்லாமலாக்கவேண்டும் என்று பேசி வருகின்றமையை நாங்கள் பார்க்கிறோம்.

அதேபோல், இன்னும் ஒரு சிலர் இந்த நாட்டிலே ஜனநாயக அரசியலுக்குள் வந்த சிறுபான்மைக் கட்சிகளை எல்லாம் ஒழித்துக்கட்டவேண்டும் எனவும் கங்கணம் கட்டியுள்ளனர்.

இவ்வாறான நிலை இந்நாட்டில் சிறு கட்சிகளையும் சிறுபான்மைச் சமுதாயத்தையும் ஜனநாயகத்தை நம்பி வாழ்கின்ற மக்களுடைய எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்குகின்ற ஒரு சதியாகவே நாங்கள் பார்க்கிறோம்.

எனவே எதிர்காலத்தில் ஓர் இனக்கலவரம் வந்து விடாமல் எல்லோரும் சகோதரத்துவத்துடனும் சமாதானமாகவும் எல்லா உரிமைகளும் பெற்று வாழ்கின்ற ஒரு நிலை வரவேண்டுமாக இருந்தால் அடுத்த தேர்தலில் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டிய தேவை இருக்கின்றது – என்றார். (ஐ)

## பதுளை விபத்து; ஏழு பேர் காயம்

கொழும்பு, ஜன. 19

பதுளை – கந்தேகெட்டிய – போஹறாதென்ன பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

தனியார் பஸ் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்தமை காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்துக்குள்ளாகி மீகாகியுல்ல மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்துக் குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்; மீண்டும் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 19

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக மீண்டும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் பணிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலையில் இருந்து மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

இந்த ஆணைக்குழு, வாக்குமூலம் பதிவு செய்யும் நடவடிக்கையைக் கடந்த நவெம்பர் மாதம் 23 ஆம் திகதி தற்காலிமாக நிறுத்தியிருந்தது.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழு, இதுவரை 39 பேரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளது. இதில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மற்றும் சமயத் தலைவர்களும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெண் உள்ளிட்ட இருவர் சிகரெட்டுக்களுடன் கைது

கொழும்பு, ஜன. 19

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற ஒரு தொகை சிகரெட்டுக்களுடன் பெண் உள்ளிட்ட இருவரைக் கட்டுநாயக்க விமான நிலையச் சுங்க திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் நேற்று முன் தினம் டுபாயிலிருந்து வருகைதந்த விமானமொன்றின் ஊடாக 323 சிகரெட் காட்டூம்களை கொண்டுவந்துள்ளனர் எனச் சுங்க திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் 38 இலட்சத்து 76 ஆயிரம் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்கள் பறி முதல் செய்யப்பட்டுள்ளன எனச் சுங்க அதிகாரிகள் கூறினர்.

சம்பவம் தொடர்பாக மேதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஜனாதிபதியின் திட்டங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை பாராட்டு

கொழும்பு, ஜன.19

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பேண்தகு அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வறுமை ஒழிப்பு, காலநிலை மாற்றம், அரச நிறுவனங்களின் டிஜிற்றல் மயமாக்கம், காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினையை முகாமைத்துவம் செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வறுமையை இல்லாதொழிப்பதே அரசின் பிரதான குறிக்கோளாகும். குறைந்த வருமானமுடைய ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் சலுகை விலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் ஆகியன தொடர்பில் ஜனாதிபதி ஐ.நா பிரதிநிதியிடம் தெளிவுபடுத்தினார்.

கல்வித்துறை, தகவல் தொழிநுட்ப மேம்பாடு மற்றும் அரச நிறுவனங்களின் டிஜிற்றல் மயமாக்கம் போன்ற செயற்பாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஐ.நா பிரதிநிதி இணக்கம் தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினை பற்றியும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. இந்தக் குடும்பங்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கான செயன் முறையொன்றைத் தயாரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

## மின்தடை

யாழ்ப்பாணம், ஜன.19

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**வவுனியா பிரதேசத்தில் -**

சூடுவெந்தபுலவு, பகல அளுத்வத்த கிராமம், சாளம்பைக்குளம் ஆகிய பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.




SRI MURUGAN

COMMUNICATION & AGENCY POST OFFICE

WESTERN UNION WU

மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.

உலகெங்குமிருந்து

உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.

No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# டெல்லி ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டிற்கு வருமாறு பாக். பிரதமர் இம்ரானுக்கு இந்தியா அழைப்பு விடுப்பு!



புதுடெல்லி,ஜன.19

டெல்லியில் நடைபெற உள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்ள வருமாறு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானுக்கு அழைப்பு விடுக்கப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

டெல்லியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ரவீஷ் குமார் கூறியவை வருமாறு:-

ஷாங்காய் அமைப்பில் உள்ள 8 உறுப்பு நாடுகள் மற்றும் 4 பார்வையாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும்.

ஜம்மு - காஷ்மீர் விவகாரத்தை சீனாவின் உதவியுடன் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் கூட்டத்தில் பாகிஸ்தான் எழுப்ப முயன்றதைச் சுட்டிக்காட்டிய ரவீஷ்குமார், இது போன்ற நடவடிக்கையை சீனாவும், பாகிஸ்தானும் எதிர் காலத்தில் தவிர்க்க வேண்டும்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஏதேனும் ஒரு விவகாரம் விவாதிக்கப்பட வேண்டுமானால், அது இருதரப்பு ரீதியாக விவாதிக்கப்பட வேண்டும் என்ற செய்தி பாகிஸ்தானுக்கு சத்தமாகவும், தெளிவாகவும் சென்றுள்ளது என்று நாங்கள் உண்மையிலேயே நம்புகிறோம்.

டெல்லியில் நடைபெற உள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் கலந்து கொள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானுக்கு அழைப்பு விடுக்கப்படும் எனக் கூறினார்.

## தலையில் 3 ரவைகளுடன் இரத்தம் சொட்டச் சொட்ட 7 கி.மீ. காரை ஓட்டிய பெண்





பஞ்சாப் மாநிலத்தில் தலையில் பாய்ந்த 3 துப்பாக்கித் தோட்டாக்களுடன் சுமார் 7 கிலோமீற்றர் தூரம் காரை ஓட்டி வந்த பெண் ஒருவர் இரத்தம் சொட்டச் சொட்ட காவல்நிலையத்தில் புகார் அளித்தார்.

அப்பெண்ணுக்கும் அவர் சகோதரருக்கும் இடையே நிலம் தொடர்பான தகராறு இருந்து வந்தது. இந்நிலையில் பத்தாம் வகுப்பு படிக்கும் சகோதரனின் மகன் சுமித் கவுர் என்ற பெண்ணையும் 65 வயதான அப்பெண்ணின் தாயையும் துப்பாக்கியால் சுட்டதாக கூறப்படுகிறது.

சுமித் கவுர் காரை எடுத்து முக்தசர் காவல்நிலையம் நோக்கி சென்றார் இரண்டு பெண்களும் தற்போது மருத்துவமனையில் தோட்டாக்கள் அகற்றப்பட்டு ஆபத்தான கட்டத்தை விட்டு நீங்கியுள்ளனர். பொலிஸார் அப்பெண்ணின் சகோதரர் ஹரிந்தர் சிங்கையும் துப்பாக்கியால் சுட்ட ஹரிந்தரின் மகனையும் தேடி வருகின்றனர்.

## இறக்குமதி வெங்காயத்தை கிலோ ரூ.25க்கு தள்ளுபடி விலையில் விற்றுத் தீர்ப்பதற்கு முடிவு



இறக்குமதி வெங்காயத்தை வாங்க மக்கள் ஆர்வம் காட்டாததை, அடுத்து அதை தள்ளுபடி விலையில் விற்று தீர்க்க இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவில் வெங்காய விலை 200 ரூபாவைத் தொட்ட நிலையில், பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில், மாநில அரசுகள் விடுத்த கோரிக்கைகளின் அடிப்படையில், துருக்கி, எகிப்து ஆகிய நாடுகளில் இருந்து தொன் கணக்கில் மத்திய அரசு அதை இறக்குமதி செய்தது. கிலோவுக்கு 55 ரூபா என்ற விலையில் அது விற்கப்பட்டது. ஆனால், வடிவத்தில் இந்திய வெங்காயத்தை விட 4 மடங்கு பெரிதான வெளி நாட்டு வெங்காயத்தில் வாசனையே இல்லை என்பதால் அதை வாங்க மக்கள் ஆர்வம் காட்டவில்லை.

இதனால் 22 ஆயிரம் தொன் வெளிநாட்டு வெங்காயம் தேங்கி உள்ளது. இம்மாத இறுதிக்குள் மேலும் 15 ஆயிரம் தின் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே இவற்றை கிலோ ஒன்றுக்கு 25 ரூபாய் என்ற விலையில் விற்பனை செய்து, இருப்பை காலி செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## ராஜஸ்தானில் வெட்டுக்கிளித் தாக்குதலால் 3.6 லட்சம் ஹெக்டேரில் பயிர்கள் பாதிப்பு!



ராஜஸ்தான் மாநிலத்தில் கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ஏற்பட்டுள்ள வெட்டுக்கிளி தாக்குதலால், சுமார் 3.6 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த மே மாதம் தெற்கு பாகிஸ்தான் பகுதியிலிருந்து பறந்து வந்த இளஞ்சிவப்பு நிற வெட்டுக்கிளிகளால் முதல் முறையாக ஏற்பட்ட பாதிப்பைக் காட்டிலும், தற்போது ஏற்பட்டுள்ள தாக்குதல் மோசமானதாக இருப்பதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

வெட்டுக்கிளிகள் முழுப்பயிரையும் உண்ணாவிட்டாலும், மலர்களை உண்பதால் கோதுமை, பருப்பு வகைகள், சீரகம், கடுகு உள்ளிட்ட பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீகங்காநகர் மாவட்டம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஹனுமன்கர், பைகனேர், ஜெய்சால்மர், பர்மீர், ஜோத்பூர் உட்பட மேலும் 9 மாவட்டங்களும், வெட்டுக்கிளி தாக்குதலால் மோசமான பாதிப்பை சந்தித்துள்ளன.

## சூரியனை ஆய்வு செய்வதற்குச் செல்கிறது இந்தியாவின் 'ஆதித்யா' செயற்கைகோள்!




சூரியனை ஆய்வு செய்வதற்கு ஆதித்யா செயற்கைகோளை விரைவில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஸ்ரீஹரிகோட்டா சத்திஸ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மைய இயக்குநர் ராஜராஜன் கூறினார்.

புதுச்சேரி உப்பளம் பெத்தி செமினார் பள்ளியில் அறிவியல் கண்காட்சியைத் தொடங்கி வைத்து மாணவர்களிடையே உரையாற்றிய அவர், நேர்மறையான எண்ணங்களை வளர்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ராஜராஜன், சூரியனின் தன்மை மற்றும் பல்வேறு செயல்பாடுகளை ஆதித்யா செயற்கைகோள் ஆய்வு செய்யும் என்றார்.

## மூன்று இந்து சிறுமிகளைக் கடத்திய விடயம் பாகிஸ்தானிடம் இந்தியா கவலை தெரிவிப்பு!

புதுடெல்லி,ஜன.19

மூன்று இந்து சிறுமிகளைக் கடத்தியமை தொடர்பாக பாகிஸ்தான் தூதக அதிகாரிக்கு இந்தியா சம்மன் அனுப்பியுள்ளது.

இந்து சிறுபான்மையினரைச் சேர்ந்த பெண்கள் பாகிஸ்தானில் கடத்தப்பட்டு பலவந்தமாக திருமணம் செய்து வைக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில், பாகிஸ்தானின் தெற்கு சிந்து மாகாணத்தின் தார்பர்கர் மாவட்டத்தில் உள்ள உமர் கிராமத்தில் ஜனவரி 14 ஆம் திகதி, சாந்தி மேக்வா மற்றும் சர்மி மேக்வா ஆகிய இரண்டு இந்து சிறுமிகள் கடத்தப்பட்டனர். ஜனவரி 15 அன்று சிந்துவின் யாக்கோபாபாத் மாவட்டத்தில் இருந்து மேலும் ஒரு சிறுமி கடத்தப்பட்டார்.

பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசில் சிறுபான்மையினரான இந்து சமூகத்தைச் சேர்ந்த சிறுமிகளை கடத்திய விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் தூதரக மூத்த அதிகாரிக்கு இந்திய வெளிவிவகார அமைச்சகம் சம்மன் அனுப்பியது. இதைத்தொடர்ந்து ஆஜரான பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளிடம் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்பாக இந்தியாவின் கவலைகள் குறித்துத் தெரிவிக்கப்பட்டதாக தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சிறுபான்மை இந்து சமூகத்தைச் சேர்ந்த சிறுமிகள் சம்பந்தப்பட்ட இத்தகைய அதிர்ச்சியூட்டும் மற்றும் இழிவான சம்பவங்களில் இந்திய மக்கள் தரப்பினரால் வெளிப்படுத்தப்பட்ட கடுமையான கவலைகள் குறித்து பாகிஸ்தானுக்கு தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# அமெ. தளங்கள் மீது ஈரான் நடத்திய தாக்குதலில் 11 வீரர்களுக்கே காயம்

வொஷிங்டன்,ஜன.19

ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது கடந்த 8 ஆம் திகதி ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 11 வீரர்கள் காயம் அடைந்தனர் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான விவகாரத்தில் அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் இருந்து வருகிறது. இதனால் ஈரானைத் தனிமைப்படுத்தி, அதன் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளை அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மேற்கொண்டார்.

இந்த நிலையில் இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்தே இருநாடுகளுக்கு இடையேயான மோதல் அதிகரித்தது. ஈரான் அண்டை நாடான ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படைத் தளத்தைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தியது. பதிலடியாக அமெரிக்கா ஈரான் நாட்டின் இராணுவத் தளபதி சென்ற கார் மீது குண்டுகளை வீசியது. இதில் இராணுவத் தளபதி காசிம் சுலைமானி உள்பட 8 பேர் உயிரிழந்தனர்.

இதற்கு ஈரான் மட்டும் இன்றி, ஈராக்கிலும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. அமெரிக்க படைகள் உடனடியாக



ஈராக் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் ஈரான் நாட்டின் புதிய தளபதியாக பொறுப்பேற்ற இஸ்மாயில் கானி, சுலைமானி கொல்லப்பட்டதற்கு பழி தீர்ப்போம் என்று சூளுரைத்தார்.

இதைத்தொடர்ந்து கடந்த 8 ஆம் திகதி ஈராக்கில் எர்பில் மற்றும் அல் – ஆசாத் விமானப்படை தளம் ஆகிய இடங்களில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது ஈரான் சரமாரியாக ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 80 வீரர்கள் கொல்லப்பட்டனர் என ஈரான் தெரிவித்தது. ஆனால் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் இந்த தாக்குதலில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று மறுத்தார்.

இந்த நிலையில் அமெரிக்க செய்தி தொடர்பாளர் கூறியவை வருமாறு:-

ஈரான் தாக்குதலில் வீரர்கள் யாரும் கொல்லப்படவில்லை. ஆனால் மூளை அதிர்ச்சி போன்ற சில குறைபாடுகளுக்காக வீரர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஈரான் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற தகவலை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏராளமான வீரர்கள் அங்குள்ள பதுங்கு குழிக்குள் செல்ல அறிவுறுத்தப்பட்டு இருந்தனர். இதனாலேயே உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது.

அந்த ஏவுகணை தாக்குதலால் ஏற்பட்ட பக்க விளைவுகளால் 11 வீரர்கள் காயமடைந்தனர். ஆனால் பெரும்பாலான இராணுவத் தளவாட பொருள்கள் சேதமடைந்தன. காயமடைந்த வீரர்களில் 8 பேர் ஜேர்மனியிலும், 3 பேர் குவைத்திலும் உள்ள ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன் அமெரிக்காவின் எடுபிடிகள்!



ஈரான் தலைவர் அயதுல்லா அலி காமேனி காட்டம்

தெஹ்ரான்,ஜன.19

ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவின் எடுபிடிகள். அவை ஈரான் சரணடைய காத்திருக்கின்றன என ஈரான் தலைவர் அயதுல்லா அலி காமேனி கூறி உள்ளார்.

பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் அரசாங்கங்கள் அமெரிக்காவின் எடுபிடிகள் என அவர் குற்றம் சாட்டினார்.

ஈரான் மற்றும் பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி, அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யா இடையே வியன்னாவில் 2015 அணுசக்தி ஒப்பந்தம் ஏற்பட்டது.

அணுசக்தி ஒப்பந்தத்தின் வரம்புகளை மீறுவது குறித்து இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஈரானுக்கு சவால் விடுத்து இருந்தன.

அணுசக்தி ஒப்பந்தத்தை ஐரோப்பிய ஒன்றிய அரசாங்கங்கள் தொடர்ந்து ஆதரித்தால் ஐரோப்பிய கார்களை இறக்குமதி செய்வதற்கு 25 சதவீத கட்டணத்தை விதிப்பதாக அமெரிக்கா அச்சுறுத்தியுள்ளதாக ஜேர்மன் பாதுகாப்பு மந்திரி அன்னெக்ரெட் கிராம்ப் – கரன்பவுர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தெஹ்ரானில் வெள்ளிக்கிழமை தொழுகையின் போது உரையாற்றிய ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி இங்கிலாந்து , பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியின் பொல்லாத அரசுகள்அணுசக்தி பிரச்சினையை (ஐ.நா) பாதுகாப்பு கவுன்சிலுக்கு எடுத்துச் செல்லுமாறு ஈரானை அச்சுறுத்தின எனக் காமேனி குற்றம் சாட்டினார்.

ஐரோப்பிய அரசுகள் ஈரானுக்கு எதிரான வரலாற்று விரோதத்தை காட்டி வருகின்றன. (ஈரான் – ஈராக் போரின்போது) சதாம் உசேனுக்கு தங்களால் இயன்ற அளவு உதவியவை இந்த மூன்று நாடுகள்தான்.

அவர்கள் அமெரிக்காவின் எடுபிடிகள் என்பது அவர்களின் வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. – என அவர் மேலும் கூறினார்.

## பிரான்ஸில் வலுக்கும் போராட்டம்

ஓய்வூதிய சீர்திருத்தத்தை கண்டித்து பிரான்ஸில் வீதியில் இறங்கி தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினர்.

பிரான்ஸில் அரசின் ஓய்வூதிய திட்ட சீர்திருத்தத்திற்கு எதிராக போராட்டங்கள்வலுத்துவருகின்றன. பல்வேறு புதிய விதிமுறைகளை இந்த திட்டத்துக்குள் கொண்டு வந்தமையால், ஊழியர்களிடையே பெரும் நம்பிக்கையின்மை எழுந்தது. சேவை காலத்தை பொறுத்து ஓய்வூதியம் மாறுபடும், ஓய்வுபெறும் வயதுக்கு முன்பாக ஓய்வூதியம் கோரினால் ஓய்வூதிய தொகை மாறுபடும் என்பன உள்பட பல புதிய கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன.

முதலில் தொழிற்சங்கங்கள் இதை எதிர்த்து போராடிய நிலையில், தொடர்ந்து நாடு முழுவதும் உள்ள ஆசிரியர்கள், வக்கீல்கள், விமான நிலைய ஊழியர்கள் என அனைவரும் போராட தொடங்கினர். கடந்த மாதம் (டிசம்பர்) ஒரே நாளில் மட்டும் அதிகபட்சமாக 8 லட்சம் பேர் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் போராட்டம் இன்னும் ஓய்ந்தபாடில்லை. நேற்று முன்தினம் நாடு முழுவதும் மொத்தம் 1 லட்சத்து 87 ஆயிரம் தொழிலாளர்கள் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். தலைநகர் பாரிசில் மட்டும் 23 ஆயிரம் பேர் போராட்டத்தில் குதித்தனர் என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அமெ. சலூனில் சூடு; ஐவர் காயம்

சிகாகோ,ஜன.19

அமெரிக்க சலூனில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் 5 பேர் காயமடைந்தனர்.

அமெரிக்காவில் யார் வேண்டுமானாலும் துப்பாக்கி வைத்துக் கொள்ள அனுமதி இருப்பதால், துப்பாக்கி கலாசாரம் மேலோங்கி உள்ளது. சாதாரண துப்பாக்கிகள் தவிர, வினாடிக்கு பல தோட்டாக்களை சுடும்துப்பாக்கிகளும்பொது மக்கள் பயன்பாட்டுக்காக விற்கப்படுகின்றன. இதனால் பள்ளி, கல்லூரி போன்ற பொது இடங்களில் பலர்கொத்துக்கொத்தாகச் கொல்லப்படும் சம்பவங்கள் அங்கு அடிக்கடி அரங்கேறுகின்றன.

இந்த நிலையில் அமெரிக்காவின் சிகாகோ நகரில் உள்ள ஒரு சலூனில் முடிவெட்டுவதற்காக கடந்த புதனன்று சிலர் காத்திருந்தனர். அப்போது கடையின் ஜன்னல் வழியாக 2 பேர் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். இந்த திடீர்தாக்குதலில் கடையில் இருந்த 3 சிறுவர்கள் உள்பட 5 பேர் காயம் அடைந்தனர்.

அவர்கள் அனைவரும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், 5 பேரின் உயிருக்கும் ஆபத்து எதுவும் இல்லை என்றும் பொலிஸ் அதிகாரிகள் கூறினர். துப்பாக்கி சூட்டில் ஈடுபட்ட நபர்களை அடையாளம் காண, அந்த பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கமராக்களில் பதிவான காட்சிகளை வைத்துத் தாங்கள் விசாரணை நடத்தி வருகின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## உலகின் குள்ள மனிதராக இருந்த கஜேந்திரா தாபா மகர் காலமானார்



உலகிலேயே மிகவும் உயரம் குறைந்த மனிதராக இருந்த கஜேந்திரா தாபா மகர் ( Khajendra Thapa Magar ) தமது 27 ஆவது வயதில் காலமானார்.

நேபாளத்தை சேர்ந்த தாபா போக்காரா நகரில் உடல் நலக்குறைபாட்டால் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனளிக்காமல் மரணம் அடைந்தார்.

கின்னஸ் சாதனை புத்தகத்தில் மிகவும் உயரம் குறைந்த நபர் உலகிலேயே இவர்தான் என்று 2010ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் 67 செ.மீ.(சுமார் 16.5 அங்குலம்) உயரமும், 6 கிலோ உடல் எடையும் கொண்டவர்.

பிலிப்பீன்ஸ் நாட்டவரான ஜுன்ரி பாலாவிங் 60 செ.மீ(சுமார் 15அங்குலம்) உயரத்துடன் அவரது சாதனையை முறியடித்தார்.

## கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சீனாவில் பிறப்பு விகிதம் பெருமளவு வீழ்ச்சி!

கடந்த 70 ஆண்டு காலத்தில் இல்லாத அளவுக்கு சீனாவில் குழந்தை பிறப்பு விகிதம் இந்த ஆண்டு குறைந்து காணப்படுகிறது.

சீனாவின் தேசிய புள்ளிவிவர அமைப்பு வெளியிட்ட தகவலில் புதிதாக பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 5 லட்சத்து 80 ஆயிரம் குறைந்துள்ளது. தற்போதைய சீனமக்கள் தொகை 146 கோடிக்கும் அதிகமானது.

ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தை என அரசு கட்டுப்பாடு 1970 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது. தற்போது சீனாவில் முதியோர் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அதற்கு ஈடாக அவர்களை கவனிக்கும் இளைஞர் கூட்டமும் உள்ளது.

30 முதல் 40 வயதுடையவர்கள் இரண்டாவது குழந்தை வேண்டாம் எனத் தங்கள் தொழில் மற்றும் வாழ்க்கையை



எண்ணி முடிவு எடுப்பதாலும் பிறப்பு விகிதம் கணிசமாக குறைந்துள்ளதாக சீன அதிகாரிகள் கூறுகின்றனர்.

# அமெரிக்கத் தடையை மீறி இலங்கை ரஷ்யாவிடம் ஆயுதங்கள் வாங்குகிறது



அமெரிக்காவின் தடையை மீறி ரஷ்யாவிடம் இருந்து ஆயுதங்கள் மற்றும் ரவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை படையினர் பயன்படுத்தும் எம்.ஐ. 17 ரக போக்குவரத்து ஹெலிக்கொப்டர்கள், மிக் தாக்குதல் விமானங்கள், யுத்த டாங்கிகள் மற்றும் வேறு வகையான ஆயுதத் தளபாடங்கள், அவற்றுக்கான உதிரிப் பாகங்களை வழங்க ரஷ்யா முன்வந்துள்ளதாக பாதுகாப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காலத்தில் ரஷ்யாவிடமிருந்து இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்யக்கூடாது என அமெரிக்காவினால் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போரால் பாதிக்கப்பட்டோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு அரசின் பல்வேறு திட்டங்கள்

### சமுர்த்தி பொங்கல் விழாவில் இராஜாங்க அமைச்சர் உறுதி





யாழ்ப்பாணம், ஜன.19

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள், முன்னாள் போராளிகள், மீள்குடியமர்த்தப்பட்டோர் மற்றும் சிறப்புத் தேவையுடையோரின் குடும்பங்கள் சமுர்த்தித் திட்டத்துக்குள் இணைத்துக் கொள்ளப்படுவதுடன் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் திட்டங்கள் கொண்டுவரப்படும் என்று இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இந்த உறுதிமொழியை அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சமுர்த்தி தைப் பொங்கல் விழா ஆவரங்கால் சமுர்த்தி வங்கி வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தனராக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய கலந்து சிறப்பித்தமையுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் பங்கேற்றார்.

சமுர்த்தி திணைக்களப் பணிப்பாளர் நாயகம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், கிளிநொச்சி சமுர்த்தி பணிப்பாளர், பிரதேச செயலகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்டம் வறுமையில் 8ஆவது மாவட்டமாக காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள முயற்சியாளர்களையும் உற்பத்தியாளர்களையும் ஊக்கிவிப்பதற்கு சிறந்த சந்தை வாய்ப்பையும் தொழில் வாய்ப்பையும் ஏற்படுத்தி முன்னேற்ற வேண்டும்.

ஜனாதிபதியால் தற்போது வழங்கப்பட இருக்கும் ஒரு லட்சம் வேலைவாய்ப்புகள் சமுர்த்தி பயானாளிகளுக்கும் சமுர்த்தி பெறுவதற்கு தகுதி உடையவர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

முன்னாள் போராளிகள், போரினால் காணமற்போனோரின் குடும்பங்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள், சிறப்புத் தேவையுடையோரை சமுர்த்தி பயனாளிகளாக்கவும் மற்றும் புதிய சமுர்த்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துமாறும் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவிடம் வேண்டுகோள் ஒன்றை முன்வைக்கின்றேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண முயற்சியாளர்களுக்கு சந்தைவாய்ப்புக்கள் தேசிய ரீதியில் மட்டுமல்ல, சர்வதேச ரீதியில் ஏற்படுத்தப்படும். யாழ்ப்பாணம் பனை உற்பத்தி பொருள்களை இணையத்தின் (Online) மூலம் சந்தைப்படுத்த ஊக்குவிக்கப்படும்.

சமுர்த்தி திட்டம் ஊடாக நாடுமுழுவதும் வறுமை ஒழிப்பு நடைமுறைப் படுத்தப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர்கள், முன்னாள் போராளிகள், மீள்குடியேற்றப்பட்டவர்கள் என்போரின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது என் தலையாய கடமையாகும். இப்பொறுப்பை செவ்வனவே செய்வேன் என்று இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

## உரிமை, சுதந்திரம் இல்லாத அபிவிருத்தி அழிவை தரும்

### சிறிதரன் எம்.பி. கூறுகின்றார்

கிளிநொச்சி, ஜன. 19

தமிழர்களின் உரிமையையும் சுதந்திரத்தையும் பறித்து விட்டுத் தருகின்ற அபிவிருத்தி எமக்கு அழிவுகளையே தரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாரதிபுர மக்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. அங்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இந்த மண்ணிலே சம உரிமையுடனும் சம அந்தஸ்துடனுமே வாழ விரும்புகிறோம் என்பதையே தமிழ் மக்கள் கடந்த ஒவ்வொரு தேர்தல்களிலும் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். இதைச் சிங்களத் தலைவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

அண்மையில் இந்த அரசின் முக்கிய அமைச்சர் ஒருவர் தமிழர்களுக்குச் சோறுதான் முக்கியம் என எள்ளிநகையாடும் வகையில் கருத்து தெரிவித்தார். எமது இனத்தின் விடுதலைக்காகவே கந்தகம் சுமந்தும் இரவு பகலாகச் சரியானவேளை உணவுகூட உண்ணாமல்களங்களில்சமராடி உயிர் துறந்தவர்கள் நம்மவர்கள். இவர்களின் தியாகங்களை எல்லாம் கொச்சைப் படுத்தும் வகையில் அவரின் கருத்துக்கள் உள்ளன. உரிமை அற்ற அபிவிருத்தியினால் எந்தவகையான





பிரயோசனமும் இல்லை என்பதற்கு கடந்த ஏப்ரல் 21தாக்குதலுக்குப் பின்னர் நடந்த விடயங்கள் மிகச்சிறந்த உதாரணமாகும் – என்றார். (ஐ)

## ராஜிதவின் பிணை ரத்தாகுமா? 21 ஆம் திகதி முடிவு தெரியும்

கொழும்பு, ஜன. 19

நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்குப் பிணை வழங்கிய உத்தரவுக்கு எதிராகச் சட்டமா அதிபர் முன்வைத்த மீளாய்வு மனு தொடர்பில் பிரதிவாதிகள் தரப்புக்கு அழைப்பாணை விடுப்பதற்கான உத்தரவு எதிர்வரும் 21ஆம் திகதி பெற்றுக்கொடுக்கப்படும் என்று கொழும்பு மேல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த மீளாய்வு மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணையின் போது நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கொழும்பு மேல் நீதி மன்றத்தில் முன்னிலையாகியிருந்தார். (ஐ)



# பிறர் மீது பழி போடுவதை நிறுத்திச் செயற்படுங்கள்!

## வடக்கு ஆளுநர் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 19

பிறர் மீது பழிபோடுவதை நிறுத்திவிட்டு, எம்மால் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் தொடர்பாக அனைவரும் ஆராயவேண்டுமென வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண திணைக்களங்கள் சில வற்றுடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அனைத்து மக்களிடத்திலும் சமூக அக்கறையை மேம்படுத்த வேண்டும்.

அதாவது சுயமாக நம்மை நாமே முன்னேற்ற வேண்டும். எம்மால் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளைத் தீர்க்காமல் எப்பொழுதும் மற்றவர்கள் மீது பழி போடுவதிலேயே காலம் வீண் விரயமாகின்றது.

எனவே இந்த நிலைமையைத் தொடராமல் இனம்காணப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வை விரைவாக அடையாளம் கண்டு, மக்களுக்கு உதவ அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் – என்றார். (ஐ)

# ரஜினி இலங்கை வர தடை ஏதும்மில்லை

## நாமல் எம்.பி. கருத்து



கொழும்பு, ஜன. 19

நடிகர் ரஜினி இலங்கை வருவதில் தடையில்லை; நிச்சயம் வரலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் தமிழகம் சென்றிருந்த வடக்கு மாகாண முன்னாள் முதல்வர் க.வி. விக்னேஸ்வரன் சென்னையில் ரஜினிகாந்தைச் சந்தித்துப் பேசினார். அப்போது, அரசியல், சினிமா குறித்து இருவரும் பேசினர் எனக் கூறப்படுகிறது.

மேலும், யாழ்ப்பாணத்துக்கு வருமாறும், அங்கு உள்ள தமிழ் மக்களைச் சந்திக்குமாறும் ரஜினிக்கு விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்தார்.

இதையடுத்து, ரஜினி இலங்கை செல்ல திட்டமிட்டுள்ளார் என்றும், அவருக்கு நுழைவிசைவு (விஸா) வழங்க இலங்கை அரசு மறுப்பதாகவும் தகவல் வெளியானது. இந்தத் தகவலை இலங்கை அரசு மறுத்தது. மேலும், ரஜினி தரப்பும் மறுத்தது.

இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷதனது டுவிட்டர் பதிவில், நடிகர் ரஜினிகாந்த் இலங்கை வருவதில் எந்தத் தடையுமில்லை, அது பற்றிய வதந்திகளில் எந்த உண்மையுமில்லை.

நானும் எனது தந்தையாரும் ரஜினிகாந்த் திரைப் படங்களின் பெரும் ரசிகர்கள். அவர் இலங்கை வர விரும்பினால் நிச்சயம் வரலாம், ஒரு தடையுமில்லை என்று தெரிவித்துள்ளார். (ஐ)

# வேண்டப்படாத விளம்பரக் குறுந்தகவல்களை பெறுவதிலிருந்து வாடிக்கையாளர் விலக வசதி

கொழும்பு, ஜன. 19

வேண்டப்படாத விளம்பர குறுந்தகவல்களைப் பெறுவதிலிருந்து வாடிக்கையாளர்கள் விலகிக்கொள்வதற்கு வசதியாக விலகல் பிரிவை (opt - out) உள்ளடக்குமாறு அனைத்து அலைபேசி இணைப்பு வழங்குநர்களுக்கும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

அத்தகைய செய்தியைப் பெறுவதை நிறுத்துவதற்கான உரிமையை நுகர்வோருக்கு வழங்குமாறு ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், விலகல் பிரிவு (opt - out) வசதியை வாடிக்கையாளர்களுக்கு கட்டணமின்றிச் செயற்படுத்துமாறும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# ஐக்கிய அரபு இராச்சியம் வருமாறு ஜனாதிபதி கோட்டாவுக்கு அழைப்பு

கொழும்பு, ஜன.19

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவுக்கு அபுதாபி அரசின் முடிக்குரிய இளவரசர் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஆயுதம் தாங்கிய படைகளின் பிரதித்தலைவர் ஷேக் மொஹமட் பின் சயிட் அல் நஹ்யன் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு அவர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளைப் பலப்படுத்த வேண்டும் என்ற தனது எதிர்பார்ப்பை உறுதிப்படுத்துவதோடு ஐக்கிய இராச்சியத்திற்கு வருகைதருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த நிலையில் அபுதாபி அரசின் முடிக்குரிய இளவரசரின் வாழ்த்துக்களுக்கு நன்றி தெரிவித்துள்ள ஜனாதிபதி, அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ளார். (ஐ)

# அமைச்சர் விதுரவுக்கு நீதிமன்று பிடியாணை



கொழும்பு, ஜன. 19

இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த இவர் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தனது சகோதரியை அச்சுறுத்தித் தாக்கியமை தொடர்பில் கைதாகிப் பிணை அனுமதி பெற்றிருந்தார். இந்த வழக்கிலேயே அவருக்கு நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஐ)

# 2025க்கு பின் எந்தத் தேர்தலிலும் போட்டியிடமாட்டாராம் ரணில்!

கொழும்பு, ஜன.19

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 2025 க்கு பின்னர் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடப்போவதில்லை என கூறியுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதாவது தற்போதைய சூழ்நிலையில் கட்சியை வலுப்படுத்துவது தொடர்பாக அனைவரும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் எனவும் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டினார்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைமைத்துவம் தொடர்பாக 2023 ஆம் ஆண்டின் பின்னர் கருத்தில் கொள்ளுங்கள் எனவும் அவர் கூறினார். (ஐ)

# பஸ்ஸில் டைனமற்!



மன்னார், ஜன. 19

மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸை நேரியகுளம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் வழிமறித்த இராணுவம் சோதனைகளை மேற்கொண்டபோது அதில் டைனமற் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

பஸ்ஸில் உரிமை கோரப்படாமலிருந்த பொதியைச் சோதனைசெய்தபோது அதில் 51டைனமற் வெடிபொருள் மீட்கப்பட்டுள்ளன.

இதனை அடுத்து பஸ்ஸையும், பஸ் சாரதி மற்றும் நடத்துநரையும் இராணுவத்தினர் செட்டிக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ஐ)




காலைக்கதிர் Kalaikathir





# நாசம்!

## இந்த மாசு உலகம்

'மாசில் வீணையும், மாலை மதியமும், வீசு தென்றலும், வீங்கிள வேனிலும், மூசு வண்டறைபொய்கையும் போன்றதே' என்றிருந்த இந்த அழகான பூமியை, எங்கள் வாழ்விடத்தை புழுக்கம் நிறைந்த சுண்ணாம்பு நீறு அறையாக மாற்றலாமா?

வான் முகில் வளாது பெய்க, மலி வளம் சுரக்க, மன்னன் கோன்முறை அரசு செய்க, குறைவிலாது உயிர்கள் வாழ்க என்ற வாழ்த்தியதன் அர்த்தம் எவ்வளவு ஆழமானது, அர்த்தம் பொதிந்தது. இதற்கேற்ப வாழுகிறோமா நாம்?

பிரான்ஸில் இருந்து வந்த எமது உறவுகள், அங்கே பிறந்தது வளர்ந்த குழந்தைகள், இங்கே எல்லாம் தூசி மயம், எதைத் தொட்டாலும் கையில் அழுக்கு படிகிறது என்கிறார்கள். எமது இயற்கை அப்படி. வடமராட்சிப் புழுதி கபில நிறமானது. வலிகாமம் செம்மண் புழுதி சிவப்பாக இருக்கிறது. சில இடங்களில் மண் கருமையாக காணப் படுகிறது.

உங்கள் நாட்டில் எல்லாம் சுத்தமாக இருப்பதாக ஒரு பிரமை. ஆனால் இங்கே காற்று ஓரளவுக்குச் சுத்தமானது. அங்குள்ள காற்றினில் கண்ணுக்கு



புலப்படாது பலவகையில் நச்சுத்தன்மை கலந்து உள்ளது என்றேன். எனது கூற்றை அங்கீகாரம் செய்வதை தவிர வேறு வழி அவர்களுக்கு இருக்கவில்லை. கொழும்பில் தூசி கண்களில் படுவதில்லை. ஆனால் உடுப்பை தோய்த்தால் கரியாக ஓடுகிறது.

உண்மையில் நாங்கள் அசிங்கம் என்று எங்கள் மண்ணில் நினைக்கும் பல விடயங்கள் இயற்கையோடு இணைந்தவை. ஆரோக்கியமானவை. மண்ணோடு சேரத்தக்க தூசி துணிக்கைகள், இலைகள், சருகுகளை மாசு என்று கருதினால் அது தப்பான சிந்தனையே. இன்று புல்லை எதிரியாக பார்க்கும் மனோபாவம் வளர்ந்து வருவது கவலைக்குரியது.

பசுமையை வீதி ஓரங்களில் கண்டால் வெட்டி எறிகிறார்கள். மண்ணை நிர்வாணமாகப் பேண நினைக்கிறார்கள். அல்லது புல்லு மருந்து பாவித்து முற்றாக ஒழிக்கும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கி விடுகிறார்கள். இந்த நச்சுத்தன்மை நிலத்தடி நீரில் கலக்கிறது. புல்லினங்கள் மாய்வதால் காபனீரொட்சைட்டை ஒட்சிசனாக மாற்றி எமது சுவாசம் தடையின்றி நடைபெற வேண்டிய செயற்பாட்டில் இடைஞ்சல் ஏற்படுகிறது.

உக்கி அழுகி இயற்கையோடு கலக்க வேண்டிய பொருள்களை நாங்கள் எரிப்பது அல்லது அவற்றின் மீது இரசாயனங்களை விசிறி அந்த செயற்பாட்டைக் குழப்புவது இயற்கைச் சமநிலையை கெடுக்கும் செயற்பாடே.

கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய். தீர விசாரித்து அறிந்ததே மெய் என்று எம் முன்னோர் சொல்வதன் அர்த்தம் எவ்வளவு ஆழமானது. மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐம்புலன்களையும் தாண்டி எமக்கு கண்ணா மூச்சி காட்டி இந்த மாசடைதல் நிகழ்ந்து வருகிறது.

உடலில் தோலில் ஒவ்வாமையை ஏற்படுத்த வல்ல (மெய்), உணவில் சுவையில் ஒவ்வாமையை ஏற்படுத்த வல்ல (வாய்), ஒளி வடிவத்தில் தலைவலியை தரவல்ல (கண்), வாசனையில் மயக்கம் பிறக்கவல்ல, கேடு தரவல்ல(மூக்கு), ஒலி மாசு என்று இன்று அதிகம் பேசப்படுகின்ற (செவி) இவற்றை எல்லாம் தாண்டி மேலும் பல வகைகளிலும் உலகம் மாசடைந்து வருகிறது.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என ஐம்பெரும் பூதங்களையும் மனிதன் நாசமாக்கியே வருகிறான். விண்வெளிப் பயணங்கள் ஆகாயத்தில் குப்பைகளைக் குவிக்கின்றன. கைவிடப்பட்ட செய்மதிகள், அவற்றில் இருந்து விடுபட்ட உதிரிப் பாகங்கள் என பல மில்லியன் தொன் எடைகொண்ட இரும்புகள் விண்வெளியில் வலம் வந்து கொண்டிருக்கிறன. இவையெல்லாம் விண்வெளிக்கு கிளம்பும்போது பூமியின் எடை குறையவே செய்கிறது.





காற்று மாசடைதல் பாரிய பிரச்சினையாக உருவெடுக்கிறது. வாகனப் புகை, தொழிற்சாலை கழிவுகள், அதிகரித்த விவசாய இரசாயன, கிருமிநாசினி மற்றும் உரப் பாவனை, அணுஉலைக் கழிவுகள் என்பன நிலத்தையும் நீரையும் காற்றையும் பெருமளவில் மாசடைய வைக்கின்றன. ஒளி, ஒலி, வெப்பம், அணுக்கதிர் வீச்சு, மின்காந்த அலை வரிசைகள் என்று கண்களுக்குப் புலப்படாத பல வடிவங்களில் மாசடைதல் தொடர்கிறது.

எமது எதிர்காலச் சந்ததிகளுக்கு வளமான மண்ணையும், சுத்தமான நீரையும், காற்றையும் கையளிக்க வேண்டிய கடப்பாடு எம்மிடமே உள்ளது.



மாசடைதல் எப்போது ஆரம்பமாகியது என்று ஆராயப் புகுந்தால் மனிதன் நாகரிகம் என்ற பெயரில் செயற்படத் தொடங்கிய காலம் முதல் என்றே கூறலாம்.

குகைகளில் அவன் வாழந்த காலத்தில் குளிருக்கு மூட்டிய தீயிற்கு போதிய ஒட்சிசன் விநியோகம் கிடைக்காதபோது காபனோர் ஒட்சைட்,கரிப்புகை என்பன காற்றினில் கலக்க ஆரம்பித்தன. நிலக்கரி பாவனை அதிகரிக்க அதிகரிக்க, வளியில் காபன் மாசும் அதிகரிக்கலானது. மனிதன் மூட்டிய 'தீ' தான் முதன் முதலில் மாசடைதலை தொடக்கி வைத்தது. அப்போதே சூரிய சக்தியைப் பயன்படுத்தி இருக்க வேண்டும்.

லண்டனில் கைத்தொழிற்புரட்சி ஏற்பட்ட காலங்களில் தேம்ஸ் நதி மற்றும் கடற்கரைகளில் மாசடைதல் ஒரு பாரிய பிரச்சனையாக உருவெடுத்து இருந்தது. புனிதம் கெடுக்கும் செயற்பாடுகள் இவை என அன்று உணரப்பட்டாலும் அவற்றைத் தடுக்க முடியவில்லை.

தொழிற்சாலைகளில் அதிகரித்த நிலக்கரி பாவனை காற்றினில் கரியை கணிசமாக கலந்தது. போக்குவரத்துச் சாதனமாக பெருமளவில் குதிரை வண்டிகள் பயன்பட்ட காலங்களில் நகரத்து வீதிகளில் குதிரைச் சாணமும் சிறுநீரும் கலந்துகொள்ள நெடி தாங்காது மக்கள் சிரமப் பட்டார்கள்.

இவற்றுக்குப் பதிலாக எரிபொருள் மற்றும் வண்டி வாகனங்கள் அறிமுகமாகியதும் அதனை ஒரு வரப்பிரசாதம் என்றே கருதினார்கள். ஆனாலும் கண்களுக்கு புலப்படாத அவற்றின் மாசுபட வைக்கும் தன்மை காலங்கடந்தே கண்டுபிடிக்கப்பட்டது. இவற்றைப் பற்றியெல்லாம் யார் கவலைப்படுகிறார்கள்?

அணு ஆராய்ச்சிகள் வலுவடைந்து அணு சக்தியும் கதிர் வீச்சும் பயன்படுத்த தொடங்கியபின் கண்களுக்கு புலப்படாத பயங்கரமான மாசடைதல் தொடர்கிறது என்பது கவலைக்குரியது.

அணுவாயுத பரிசோதனைகளை நாடுகள் கட்டுப்பாடின்றியும், உரிய பாதுகாப்பு நடைமுறைகளை கைக்கொள்ளாமலும் முன்னெடுத்துச் செல்லுகின்றன. உலகத்தை யார் முதலில் அழிப்பது என்று பலரும் கங்கணம் கட்டிக் கொண்டு கிளம்புவது வெளிப்படையாக தெரிகின்றது. யாரை, யார் கட்டுப்படுத்துவது என்று புரியாமல் இயற்கை ஆர்வலர்கள் கலங்கி நிற்கிறார்கள். அவர்களால் கட்டுரைகளைத்தான் வரைய முடிகிறது.

எண்ணெய்த் தாங்கிக் கப்பல்கள் அடிக்கடி விபத்துக்கு உள்ளாவதும், அவற்றில் இருந்து பெருமளவு மசகு எண்ணெய் கடலினிலே கலந்து மிதக்கும் எண்ணெய்ப் படலமும் பாரிய சுற்றுச்சூழல் பிரச்சினைகளை உண்டாக்கி விடுகின்றது. கடல்வாழ் உயிரினங்கள் பலவும் இதனால் பாதிப்பை எதிர்நோக்குகின்றன. இவ் எண்ணெய்ப்படலங்கள் நீண்ட காலத்திற்கு அழிவின்றித் தாக்குப்பிடிக்க வல்லவை.

கடலில் மிதக்கும் பெருமளவு பிளாஸ்டிக் பொருள்கள், நீரை மொண்டு உணவை பெறும் சுறாக்கள், திமிங்கிலங்கள் மற்றும் கடல்வாழ் உயிரிகளின் வயிற்றில் சிக்கிக் கொள்ளுகின்றன. பல மீன்கள் பிளாஸ்டிக் வளையங்களை தமது உடலின் வெளியே சுமந்துதிரிகின்றன. அவற்றின் செதில் திசைக்கு எதிராக அவை கழன்று கொள்ள முடியாது சிக்கி விடுகின்றன. இதனால் இந்த மீன்களின் வளர்ச்சியின்போது விகாரமான பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன.

(தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikathir



**கனடாவிலிருந்து மாதம் இரு இதழாக தொடர்ந்து நீண்ட காலம் வெளிவரும் சஞ்சிகை 'விளம்பரம்'. இந்த வகையில் கனடாவின் மூத்த தமிழ் இதழாகவும் அது மதிக்கப்படுகின்றது. தமிழர் தாயகத்தில் இயங்கும் முன்பள்ளிகள் குறித்து அதன் பிந்திய கடைசிப் பதிப்பில் வரையப்பட்டுள்ள 'தாயக மடல்' இங்கு பிரசுரமாகின்றது. 'ஆறுதல்' நிறுவனப் பணிப்பாளர் திரு. சுந்தரம் டிவகலாலாவுடன் அந்நிறுவனம் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களின் வாண்மைவிருத்தி, செயற்பாடுகள் குறித்து தொடர்பு கொள்ள விரும்புவோர் sundaramdiva15gmail.com என்ற மின் அஞ்சல் முகவரி ஊடாக அதனை மேற்கொள்ளலாம்.**

# தமிழர் பிரதேசங்களில் முன்பள்ளிகள்: புலம்பெயர் அவதானியின் பார்வையில்

மிகக் குறைந்த வருமானத்துடன் சமூகத்தில் மிக முக்கியமான பணியை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டுவரும் முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்பிலேயே இந்த மடலை வரைகின்றேன்.

இன்று நாடு முழுவதும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக வேலை வாய்ப்பு, ஊதிய உயர்வு போன்றவற்றிற்காக வீதியிலிறங்கிப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பணிப்புறக்கணிப்புப்போராட்டங்களும்மேற்கொள்ளப்படுகின்றன. இவ்விதமான போராட்டங்கள் எதனையும் மேற்கொள்ளாமலிருப்பதாலோ என்னவோ முன்பள்ளி ஆசிரியர்களின் பிரச்சினைகள் அதிகளவில் வெளியில் தெரியாமலுள்ளன.

வடக்கு, கிழக்கிலுள்ள முன்பள்ளிகள் யாவும் தனியாரினால், அல்லது பொது அமைப்புக்களினால் நடத்தப்பட்டு வருகின்றன. முன்பள்ளி ஆசிரியர்கள் அரசாங்கத்தால் எவ்விதத்திலும் இன்னும் உள்வாங்கப்படவில்லை. மாதாந்த ஊதியமாக ஒரு முன்பள்ளி ஆசிரியர் 6 ஆயிரம் ருபாவை மட்டுமே தற்போது பெற்றுக்கொள்கின்றார். ஆரம்பத்தில் மூவாயிரம் ரூபாவாகவும், பின்னர் நான்காயிரம் ரூபாவாகவும் இருந்த ஊதியம் அண்மையிலேயே 6 ஆயிரம் ரூபாவாக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் ஒரு தொகையிலான முன்பள்ளிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் நடத்தப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது இராணுவத்தின் பிரிவாக உள்ள CSD எனப்படுகின்ற சிவில் பாதுகாப்பு பிரிவினரால் நடத்தப்படுகின்ற இந்த முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு மட்டும் மாதம் 30 ஆயிரம் ரூபா ஊதியம் வழங்கப்படுகின்றது. இதன் நோக்கம் குறித்து விமர்சனங்கள் இருந்தாலும் அந்த முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் தங்கள் குடும்ப வாழ்வாதாரத்தை இதன் மூலம் சமாளித்துக்கொள்ள முடிகின்றது. இந்த முன்பள்ளிகளை கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவந்து, ஏனைய முன்பள்ளிகளையும் அதனோடு இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டும் அது இதுவரை சாத்தியப்படவில்லை.

முன்பள்ளிகளில் பெண்கள் மட்டுமே ஆசிரியர்களாக பணிபுரிகின்றனர். அவர்கள் அங்கு வரும் பிள்ளைகளுக்கு ஒரு தாயாகவே தங்களை அர்ப்பணிக்கின்றனர். ஒரு முன்பள்ளி ஆசிரியையை இரண்டாவது தாய் என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது.






மூன்று வயதாகும் போது, தங்கள் பிள்ளைகளை பெற்றோர் முன்பள்ளியில் அனுமதிக்கின்றனர். ஐந்து வயது வரை முன்பள்ளி செயற்பாடே தொடர்கின்றது. ஒரு நாளின் பெரும் பகுதியை பிள்ளைகள் முன்பள்ளிகளிலேயே கழிக்கின்றனர். கணவன், மனைவி இருவருமே வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் அதிக நேரங்களில் முன்பள்ளி ஆசிரியர்களே தாயாக இருந்து அந்தப் பிள்ளைகளை கவனித்துக் கொள்கின்றனர். அப்பிள்ளைகளோடு ஆடிப்பாடி அவர்களை மகிழச்சியோடு வைத்துக் கொள்கின்றனர். மகிழ்ச்சியான கற்றலாகவும், விளையாட்டாகவும் அப்பிள்ளைக ளின் நேரங்கள் கழிக்கின்றன.

இவற்றை விடவும் சிறு பிள்ளைகளின் உளவளத்தைப் பேணி, அவர்களைச் சிறந்த பழக்கவழக்கங்களைக் கொண்டவர்களாக உருவாக்கும் அடிப்படையான ஓர் அமைப்பாகவும் இந்த முன்பள்ளிகளே அமைகின்றன. இதனால் உலகின் பல நாடுகளில் முன்பள்ளி ஆசிரியர்கள் மதிக்கப்படுபவர்களாக உள்ளனர். அது மட்டுமன்றி அந்த நாடுகளில் அதிகம் ஊதியம் பெறுகின்றவர்களாகவும் முன்பள்ளி ஆசிரியர்கள் உள்ளனர். முன்பள்ளி ஆசிரியர்களின் அடிப்படையான பணி தொடர்பில் அந்தநாடுகளும், அந்நாடுகளிலுள்ள கல்விசார் அமைப்புக்களும், பெற்றோரும் நன்கு புரிந்துகொண்டிருப்பதாலேயே அங்கு அவர்கள் இவ்வாறு மதிக்கப்படுகின்றனர்.

சிறு பிள்ளைகளுக்கான கற்பித்தல் மற்றும் சிறார்களின் உளவியலைப் பேணும் முறை குறித்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. முழுமையாக பயிற்சி பெறாதவர்கள் அந்நாடுகளில் முன்பள்ளி ஆசிரியர்களாக பணியாற்ற முடியாது.

வடக்கு கிழக்கில் இன்று இளம் பராயத்தினர் தவறான வழிகளில் செல்வதும், இளைஞர்கள் வன்முறைகளில் ஈடுபடுவதும், உளப் பாதிப்புகளால் இளைஞர்கள், மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வதும் செய்திகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றமையைப் பாரக்கின்றோம். சிறார்களாக இருக்கும் பருவத்திலிருந்தே அவர்கள் உளநிலையும் வாழ்க்கைச் சூழலும் நல்ல முறையில் பேணப்பட்டு வருமானால் அவர்களை நல்ல மனிதர்களாக உருவாக்க முடியும். இதற்கு முனபள்ளிகள் இன்றியமையாதவை. முன்பள்ளி ஆசிரியர்களின் பணி இன்றியமையாதது.

சிறுவர்கள் குறித்தும், நம் எதிர்கால சந்ததி குறித்தும் சிந்திப்பவர்கள் இதனைக் கவனத்திற் கொள்ள வேண்டும். எல்லாவற்றிற்கும் நாம் அரசாங்கத்தை நம்பிக்கொண்டிருக்க முடியாது. எமது சமூகம் குறித்து நாமே அதிகளவு சிந்தித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

புலம்பெயரந்த நாடுகளில் வாழும் உறவுகள் இது குறித்து சிந்திக்கலாம். அங்கு உதவும் பனப்பான்மையுடன் பலர் இருக்கின்றனர். பல உதவும் அமைப்புகள் இருக்கின்றன. அங்குள்ள கோவில்கள் உதவுகின்ற அமைப்பாக இருக்கின்றன. பழைய மாணவர் சங்கங்கள் நிதி வளம்கொண்டவையாக திகழ்கின்றன. அனைத்து தரப்பினரும் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் பிரதேசங்களிலுள்ள முன்பள்ளிகள் குறித்து ஒரு தீர்மானம் மேற்கொண்டு சில திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம்.

– தமிழ் பிரதேசங்களில் உள்ள முன்பள்ளிகளை பொதுவான ஒரு அமைப்பின் கீழ் கொண்டுவருதல்.

– முன்பள்ளிகளை சிறார்களின் மகிழ்ச்சியான சூழலாக அழகுபடுத்தல்.

– முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சிறுவர் உளவியல் உள்ளிட்ட பல விடயங்களில் பயிற்சியளித்தல்.

– முன்பள்ளி ஆசிரியார்களின் ஊதியத்தை அதிகரித்து அவர்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல்.

மேலும், பல விடயங்கள் குறித்தும் இத்துறை சார்ந்தோரின் ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் 'ஆறுதல்' என்ற அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள முனபள்ளிகள் தொடர்பில் பணியாற்றி வருகின்றமையினை பலர் அறிந்திருக்கலாம். 'வடலிகள் வானுயரும்' என்ற மகுட வாசகத்துடன் இயங்கும் ஆறுதல் நிறுவனம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சியையும் அதற்கான சான்றிதழ்களையும் வழங்கி வருகின்றது. முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான கல்வி அமைச்சின் செயலாளராகவிருந்து ஓய்வு பெற்றுள்ள திரு.சுந்தரம் டிவகலாலா இந்நிறுவனத்தின் பணிப்பாளராக உள்ளார். இவருடன் தொடர்பு கொண்டு முன்பள்ளி தொடர்பான விவரங்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அண்மையில் வட மாகாண முன்பள்ளி ஆசிரியர்களின் தொழிற்சங்க நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோதே முன்பள்ளிகள் தொடர்பிலும் அதன் ஆசிரியர்களின் பிரச்சினைகள் குறித்தும் எழுத வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதுவே இந்த தாயக மடல்.

- ஆதித்தன்

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ஏுபன் மரியாம்பிள்ளை – ஊடக விரிவுரையாளர்.

# இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மேரி பஸ்ரியன் அடிகளாரின் நினைவு தினம்





யாழ் மறைமாவட்டத்தை சேர்ந்தவரும் மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றியபோது வங்காலை புனித ஆன்னாள் ஆலயபங்கு பணிமனையில் வைத்து இலங்கை இராணுவத்தினரால் சுட்டு கொல்லப்பட்டவருமான மேரி பஸ்ரியன் அடிகளாரின் 35ஆவது ஆண்டு நிறைவு அண்மையில் நினைவு கூரப்பட்டது.

1948ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இளவாலையில் பிறந்து 1975ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்ட குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட மேரி பஸ்ரியன் அடிகளார் மானிப்பாய், முருங்கன், மடு, வங்காலை ஆகிய இடங்களில் பங்குப் பணியாற்றியவர். 1981ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்டம் யாழ் மறைமாவட்டத்தில் இருந்து பிரிக்கப்பட்ட போது மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்ற முன்வந்தார்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டு தென் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து மன்னாரில் குடியேறிய மக்களுக்குத் துணையாக இருந்து வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக் கொடுத்தார். காலத்தின் தேவைகேற்ற சமூகப்பணியாற்றிய இவர் மன்னார் பகுதியில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உடல்களை எடுத்து அடக்கம் செய்வதில் முன்னின்று உழைத்தார்.


06 ஜனவரி 1985 அன்று அதிகாலை வேளையில் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவத்தினர் மேரி பஸ்ரியன் அடிகளாரைச் சுட்டுக் கொன்று அவரது உடலை எடுத்துச் சென்று விட்டு அவர் இந்தியா தப்பிச் சென்றார் என வதந்தியைப் பரவவிட்டனர். அப்போது மன்னார் மறைமாவட்ட ஆயராக பணியாற்றிய மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதிக்கு இப்படுகொலை தொடர்பான விசாரணையை வலியுறுத்தி கடிதங்களை எழுதினார். அப்போதைய யாழ் ஆயர் மேதகு கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகை கிறிஸ்தவ இறுதிச் சடங்குகளை நடத்த மேரி பஸ்ரியன் அடிகளாரின் உடலைத் தரும்படி அரசிடம் வேண்டினார். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

# 26 ஜனவரி 2020 திருத்தந்தையினால் இறைவார்த்தை ஞாயிறாகப் பிரகடனம்

2020 ஆம் ஆண்டின் பொதுக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு தினமான ஜனவரி 26ஆம் திகதியை இறைவார்த்தை ஞாயிறாக அப்பறுயிற் இல்லிஸ் (APERUIT ILLIS) என இலத்தீன் மொழியில் அழைக்கப்படும் திருத்தூது மடல் ஊடாகத் திருத்தந்தை பிரரன்சிஸ் அவர்கள் பிரகடனப்படுத்தியுள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த இறைவார்த்தை ஞாயிறு பற்றிய அறிவிப்பை 2019ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி அப்பறுயிற் இல்லிஸ் என்ற தலைப்பில் என இலத்தீன் மொழியில் தன் சொந்த விருப்பத்தின்பேரில் வெளியிட்ட திருத்தூது மடல் ஊடாக அறிவித்தார். ஜனவரி 26ஆம் திகதி சிறப்பிக்கப்படும் இந்த இறைவார்த்தை ஞாயிறு வழியாக கடவுள் மற்றும் அவரது வார்த்தை மீது ஆழ்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்தி, அன்புசெலுத்தி, பிரமாணிக்கத்துடன் சாட்சி பகர நமக்கு அழைப்பு விடுக்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.


உலகின் அனைத்து மறைமாவட்டங்களும் பங்குத்தளங்களும் மிகுந்த படைப்பாற்றலுடனும் புதுப்பிக்கப்பட்ட முயற்சிகளுடனும் இந்த இறைவார்த்தை ஞாயிறைக் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.




இந்த இறைவார்த்தை ஞாயிறு பற்றி பேசியுள்ள புதியவழி நற்செய்தி அறிவிப்பு திருப்பீட அவைத் தலைவர் பேராயர் ரீனோ பிசிக்கெல்லா அவர்கள், இறைவார்த்தையைக் கொண்டாடி அதை ஆழ்ந்து படித்து உள்வாங்கி பரப்புவதற்கென அர்ப்பணிக்கப்பட்ட இந்த சிறப்பான நாள் நம் வாழ்வில் இறைவார்த்தை எவ்வளவு முக்கியம் என்பதை உணர்வதற்கு உதவுகின்றது என்றும், உலகில் அதிகம் விநியோகம் செய்யப்பட்டுள்ள நூலே திருவிவிலியம் என்றும் இந்நூல் நம் கைகளில் இல்லாததால் அது நன்கு பத்திரப்படுத்தப்பட்டு தூசு படிந்துள்ளதாக உள்ளது என்றும் கூறியுள்ளார்.

# இலங்கேசன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார் ஆயர் கலாநிதி கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை





மதங்களை தாண்டி மனித நேயத்தின் ஆயராக அனைவரையும் அரவணைக்கும் அன்பின் ஆயராக திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்டத்திலும் பின்னர் திருகோணமலை மறைமாவட்டத்திலும் பணியாற்றிய மேதகு கலாநிதி கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை இலங்கேசன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்ற மகிழ்வான செய்தியை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். ஆயர் மேதகு கலாநிதி கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகையையும் அவருக்கு இவ் விருதை வழங்கும் திருமலையில் சைவ ஆன்மிக வேதாகமாமணி பிரம்ம ஸ்ரீ சோ.இரவிச்சந்திர குருக்கள் அவர்களையும் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்துகிறோம்.

# இறந்த இயேசுவின் உடலைப் போர்த்தியிருந்த திருத்துணி 2020 இல் மக்களின் பார்வைக்கு!

இத்தாலியின் தூரின் நகர் பேராலயத்தில் வைத்து பாதுகாக்கப்படும் இறந்த இயேசுவின் உடலைப் போர்த்தியிருந்ததாக நம்பப்படும் திருத்துணி, கிறிஸ்தவ ஒன்றிப்பு குழுமம் ஐரோப்பிய இளைஞர்கள் கூட்டத்தை 2020ஆம் ஆண்டு டிசெம்பரில் தூரின் நகரில் நடத்தவிருப்பதை முன்னிட்டு அச்சமயத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய இளைஞர்களின் அடுத்த கூட்டம் 2020ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் திகதி முதல் 2021ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வரை இத்தாலியின் தூரின் நகரில் நடைபெறும். இறந்த இயேசுவின் உடலைப் போர்த்தியிருந்ததாக நம்பப்படும் திருத்துணி 2000 மாம் யூபிலி ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது. அதற்குப் பின் ஐந்தாவது முறையாக 2020ஆம் ஆண்டு டிசெம்பரில் திறந்து வைக்கப்படவுள்ளது. 2015ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதியிலிருந்து ஜூன் 24 ஆம் திகதி வரை தூரின் பேராலயத்தில் அத்திருத்துணி பொது மக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது. அந்த ஆண்டு ஜூன் 21 முதல் 22 வரை தூரின் நகருக்கு மேய்ப்புப்பணி பயணம் மேற்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அதைப் பார்வையிட்டுச செபித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





பனங்காட்டான்

# உறவுகளும் நட்புகளும் கூட்டில் இணைந்த இராணுவ நல்லாட்சி!

இராணுவ ஆட்சி இல்லையென்று கூறும் கோட்டாபய ஆட்சியில் சிறையிலிருந்த இராணுவத்தினர் விடுதலையாகின்றனர். தூக்குத்தண்டனை பெற்ற இராணுவத்தினர் வெளியே வருகின்றனர். தண்டனை பெற்ற படையினர் பதவியுயர்வு பெறுகின்றனர். அப்புவும் ஆச்சியும் அண்ணனும் தம்பியும் மச்சானும் மருமகனும் அரசியல் நியமனம் பெறுகின்றனர். அப்படியானால் இதனை உறவுகளும் நட்புகளும் கூட்டிணைந்த இராணுவ நல்லாட்சி என்று கூறலாமா?

ஜனநாயக ரீதியாக நடைபெற்ற ஒரு தேர்தலில், ஓரின மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஜனாதிபதியின் ஆட்சி, எவ்வாறு இராணுவ ஆட்சியாக மாறுமென்பதைத் தெரியவேண்டுமானால் இலங்கையைப் பார்க்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றவேளை எவ்வகையான அச்சம் பலமட்ட மக்களிடம் இருந்ததோ, அவை அப்படியே இப்பொழுது செயற்பாடாகத் தெரிகின்றன.

இலங்கையில் ஒருபோதும் ரைாணுவ ஆட்சி ஏற்படாது என்று அடிக்கடி கூறிவரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதற்கு எதிர்மாறான செயற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார். இதனால், கொழும்பு அரசியல் வித்தியாசமாகச் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

இலங்கையின் ஊடகவியலாளர் ஒருவரின் கணக்கின்படி இதுவரை சுமார் 32 வரையான பிரதான உயர்பதவிகளுக்கு படைத்துறையினர் நியமனம் பெற்றுள்ளனர். இவர்களுள் அநேகமானவர்கள் கோட்டாபயவின் இராணுவப் பணிக்காலத்தில் அவரோடு கடமையாற்றியவர்களும், யுத்த காலத்தில் அவரின் உத்தரவுகளை சிரமேற்கொண்டு நிறைவேற்றியவர்களும் ஆவர்.

காலியாகவுள்ள முப்படைகளின் பிரதானிப் பதவியை தமது கூட்டாளியும் தற்போதைய இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வாவுக்கு இவர் வழங்கியுள்ளார்.

இவரைக் கூட்டாளி என்று குறிப்பிடுவதன் அர்த்தமானது இருவரும் இராணுவத்தில் கஜபா அணியைச் சேர்ந்தவர்கள் என்பதைவிட, ஜெனீவாவில் போர்க்குற்றவாளிகளென அடையாளம் காணப்பட்டவர்களென்பதைக் குறிப்பதாகும்.

ஓய்வு பெற்ற இன்னொரு இராணுவக் கட்டளை அதிகாரியைக் கூட்டுப்படைகளின் பிரதானியாக நியமிக்க இப்போது கண் வைத்துள்ளார்.

படைத்துறை அதிகாரிகளை வலமும் இடமும், முன்னும் பின்னுமாக நியமித்துவரும் இவர் மறுபுறத்தில் சிறைச்சாலைகளுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் படையினரை தம் விருப்பப்படி எதேச்சாதிகாரமாக விடுதலை செய்து வருகிறார்.

தமிழர் தாயகத்தில் தென்மராட்சியிலுள்ள மிருசுவில் என்ற கிராமத்தில் 2000 ஆம் ஆண்டில் எட்டுத் தமிழர்கள் கழுத்து அறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ சார்ஜன் சுனில் ரத்னாயக்காவுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் 1968 இல் அப்போதைய பிரதமர் டட்லி சேனாநாயக்கவினால் திறந்து வைக்கப்பட்டது. இப்பகுதியில் வாழ்ந்த ஒன்பது பேர் 2000 டிசம்பர் 19ஆம் திகதி தாங்கள் குடியிருந்த வீடுகளைப் பார்க்கச் சென்றனர். இவர்களுள் ஒருவர் மறுநாள் அடிகாயங்களுடன் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நீண்ட இழுபறிக்குப் பின்னர் கைதான எட்டு இராணுவத்தினரில் ஒருவரான சார்ஜன் சுனில் ரத்னாயக்காவுக்கு 2015 ஜூன் 25ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றம் தூக்குத் தண்டனை வழங்கியது.

வெளியே எவருக்கும் தெரிவிக்காது கோட்டாபய கடந்த வாரம் இந்தக் குற்றவாளியை விடுதலை செய்தார். இந்தச் செயலுக்கு சர்வதேச ரீதியாக மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இவற்றைக் கவனத்தில் கொள்ளாத கோதபாய, படைத்துறையினரை பாதுகாப்பதற்கென புதிய சட்டமொன்றைக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

படைத்துறையினருக்கெதிராக எவராலும் எப்போதும் எந்தச் சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாதவாறு அவர்களுக்கு சட்ட விதிவிலக்கு அளிப்பதே இதன் இலக்கு. தற்போது ஜனாதிபதிக்கு மட்டுமே அரசியல் யாப்பினூடாக இந்தச் சட்ட விதிவிலக்கு உண்டு.

இதனை நேரடியாகச் சொல்வதானால், இலங்கையில் எந்தப் படையினர் மீதும் எந்த வேளையிலும் என்ன குற்றத்துக்காகவும் யாரும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது. அதனைத் தடுப்பதே இதன் இலக்கு. ஒருவகையில் இது இராணுவ ரீதியான சர்வாதிகாரப் போக்காகவும் காணப்படுகிறது. முடியுமானால் இதன் வழியாக ஜெனீவாவைக் கையாளலாமெனவும் கோட்டாபய சிந்திக்கிறார் போலும்.

இதற்கு நிகராக இன்னொரு விடயம் வெளியில் சொல்லாமல் கொள்ளாமல் நடைபெற ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே கைதாகி இருந்தோர் கோட்டாபய ஆட்சியில் விடுவிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு பின்னர் பதவி உயர்வும் வழங்கப்படுகிறது.

2008 ஆம் ஆண்டு கொழும்பில் கடத்தப்பட்ட பின்னர் காணாமல்போன 11 இளைஞர்கள் வழக்கில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி.தசநாயக்க கைது செய்யப்பட்டிருந்தார்.

விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட போரில் முக்கிய பங்கெடுத்தவரான இவர் 1998 இல் கடற்படையில் சேர்ந்தவர். பின்னர் ஒரு காலத்தில் கடற்படையின் பேச்சாளராகவும் பணிபுரிந்தவர்.

பதினொரு இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் போன வழக்கிலிருந்து இவரை விடுவித்துள்ள கோட்டாபய இப்போது இவருக்கு றியர் அட்மிரல் பதவியுயர்வும் வழங்கியுள்ளார்.

அதேபோன்று, இங்கிலாந்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றிய இராணுவ அதிகாரியொருவருக்கும் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழ் ஆர்ப்பாட்டக்காரர்களைப் பார்த்து கழுத்தை வெட்டுவேன் என்று கைகளால் சைகை காட்டிய பெர்னான்டோ என்பவரே அந்தஈராணுவ அதிகாரி.

இவருக்கு இங்கிலாந்தின் நீதிமன்றமொன்று தண்டனையாகக் குற்றப்பணம் செலுத்த உத்தரவிட்டது. அந்தப் பணத்தை அவரைச் செலுத்தவிடாது இலங்கை அரசே பினாமி ஒருவர் மூலம் செலுத்தி அவரைக் காப்பாற்றி இலங்கைக்கு வர வைத்தது.

கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் பதவியுயர்வுடன் புதிய பதவியும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனூடாக சர்வதேசத்துக்கு கோட்டாபய நிர்வாகம் தெரியப்படுத்தும் செய்தி என்னவெனில், சிங்களப் படையினர் மீது எங்காவது, ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமானால் அவர்கள் தேசிய வீரர்களாக மதிக்கப்பட்டு பதவி உயர்வுகள் வழங்கப்படுவார்கள் என்பதாகும்.

ஆக, கோட்டாபய ஜனாதிபதியாக பதவியேற்ற இரண்டு மாதங்களுக்குள் நான்கு வகை செயற்பாடுகள் எந்த ஆரவாரமோ ஆர்ப்பாட்டமோ இன்றி மேற்கொள்ளப்படுகின்றன.

முதலாவது - முக்கியமான உயர் பதவிகளுக்கு முன்னாள், இந்நாள் படைத்துறையினர் நியமனம்.

இரண்டாவது - ரணில், மைத்திரி ஆட்சிக்காலத்தில் சிறை வைக்கப்பட்ட அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட அல்லது தண்டனை பெற்ற இராணுவத்தினருக்கு விடுதலையுடனான பதவியுயர்வு.

மூன்றாவது - ஏதாவது நீதிமன்றமொன்றில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட படையினர் அக்குற்றத்திலிருந்து நீக்கப்பட்டு உடனடியாக உயர் பதவிகளுக்கு நியமனம். இதன்வழியாக தண்டனை வழங்கிய நீதிமன்றங்களின் முகத்தில் கரி அப்புவது.

இராணுவ ஆட்சி இல்லையென்று கூறும் கோட்டாபய ஆட்சியில் சிறையிலிருந்த இராணுவத்தினர் விடுதலையாகின்றனர். தூக்குத் தண்டனை பெற்ற இராணுவத்தினர் வெளியே வருகின்றனர். தண்டனை பெற்ற படையினர் பதவியுயர்வு பெறுகின்றனர். அப்புவும் ஆச்சியும் அண்ணனும் தம்பியும் மச்சானும் மருமகனும் அரசியல் நியமனம் பெறுகின்றனர். அப் படியானால் இதனை உறவுகளும் நட்புகளும் கூட்டிணைந்த இராணுவ நல்லாட்சி என்று கூறலாமா?

நான்காவது - இனிமேல் எந்தவொரு படைத்தரப்பினர் மீதும் எந்தக்குற்றத்திற்காகவும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதவாறு அவர்களுக்கு சட்ட விலக்களிக்கும் புதிய சட்டத்தை தாமதமின்றி நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பது.

அடுத்து, அரசாங்க சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் உயர்மட்ட நியமனங்களில் குடும்ப உறுப்பினர்களுக்கும், நண்பர்கள் கூட்டத்துக்கும் வழங்கப்படும் முன்னுரிமை கவனத்தைப் பெறுகிறது.

அமைச்சர்கள் தங்களின் நிர்வாகத்தின் கீழ்வரும் எந்தப் பதவிகளையும் அவர்கள் விரும்பியவாறு ஆள்களை நியமிக்க முடியாது கோட்டாபய தடுத்துவிட்டார். இந்த நியமனங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுதியானவர்களைத் தெரிந்தெடுக்க உயர்மட்ட சபையொன்றையும் அவர் நியமித்தார்.

இச்சபையினூடாக இதுவரை நியமனம் பெற்ற சிலரை இங்கு குறிப்பிட்டால் கோட்டாபய அரசியலின் விண்ணாணம் தெரியவரும்.

மஹிந்தவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ஷவின் மனைவியின் தந்தையும், இளைய மகன் ரோஹித ராஜபக்ஷவின் மனைவியின் தாயாரும் இலங்கை விமான போக்குவரத்துச் சபையில் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கலிபோர்னியாவின் லொஸ்ஏஞ்சல்சில் வசிக்கும் கோட்டாபயவின் நெருங்கிய சகாவான மால்ராஜ் டி சில்வா ஐக்கிய அரபுக் குடியரசின் தூதுவர் பதவிக்கு கோட்டாபயவின் சிபாரிசில் நியமனம் பெற்றுள்ளார். மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவில் துணைத்தூதுவராகப் பதவி வகித்த இவர் மாதாந்தம் எண்ணாயிரம் அமெரிக்க டொலரை வீட்டு வாடகைக்குச் செலுத்திய விடயத்தில் நிதி மோசடி விசாரணைக் குழுவின் விசாரணையில் இருக்கின்ற போதிலும் இந்த நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் சட்டக்கல்லூரித் தோழரும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசருமான இவான் வனசுந்தர பிரான்ஸுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கோட்டாபயவின் ஆத்ம நண்பரெனக் கூறப்படும் நளின் டி சில்வா மியன்மாருக்கான (பர்மா) தூதுவராக நியமனமாகியுள்ளார். இந்த நாட்டில்தான் பௌத்த பிக்குகளின் தர்பார் இடம்பெற்று வருகிறது.

கடந்த பத்து வருடங்களாக கோட்டாபயவின் தனிப்பட்ட போக்குவரத்து ஏஜென்டாகவிருந்த உபுல் பியதாச உள்நாட்டு விமானப் போக்குவரத்தின் தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமனமாகியுள்ளார். அடுத்த சில வாரங்களுக்குள் சுமார் மூன்று டசின் வரையான குடும்ப நண்பர்களும், உறவினர்களும் முக்கியமான பதவிகளைப் பெறுவதற்காகக் காத்திருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2004 - 2015 யுகம் மீண்டும் வந்துவிட்டதாக பலரும் கருதுகின்றனர்.

இராணுவ ஆட்சி இல்லையென்று கூறும் கோட்டாபய ஆட்சியில் சிறையிலிருந்த இராணுவத்தினர் விடுதலையாகின்றனர். தூக்குத் தண்டனை பெற்ற இராணுவத்தினர் வெளியே வருகின்றனர். தண்டனை பெற்ற படையினர் பதவியுயர்வு பெறுகின்றனர். அப்புவும் ஆச்சியும் அண்ணனும் தம்பியும் மச்சானும் மருமகனும் அரசியல் நியமனம் பெறுகின்றனர். அப்படியானால் இதனை உறவுகளும் நட்புகளும் கூட்டிணைந்த இராணுவ நல்லாட்சி என்று கூறலாமா?

நன்றி - பதிவு

# இலங்கை அணிக்காக வெண்கலப் பதக்கம் வென்ற சாதனை மாணவிக்கு கௌரவிப்பு





யாழ்ப்பாணம், ஜன.19

ஆசியளவிலான'கலப்பஞ்சல்'போட்டியில் இலங்கை அணி சார்பில் பங்கேற்று வெண்கலப்பதக்கத்தை பெற்ற பண்டத்தரிப்பு சாந்தையைச் சேர்ந்த சாதனை மாணவி இந்திரசித்து – தமிழரசி வெண்கரம் அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட பட்டிப்பொங்கல் விழாவின் போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

நீச்சல் – சைக்கிளோட்டம் – மரதன் ஆகிய மூன்று விதமான விளையாட்டுகளை உள்ளடக்கிய கலப்பஞ்சல் போட்டிக்கான இலங்கை அணியில் சைக்கிளோட்ட வீராங்கனையாக தெரிவுசெய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டுக்கான ஆசியமட்டப் போட்டியில் பங்கேற்று வெண்கலப்பதக்கத்தை வென்றிருந்த வெண்கரம் அமைப்பின் சாந்தை – சில்லாலை படிப்பக மாணவியான தமிழரசி பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டிருந்தமையுடன் சிறு தொகை பணப்பரிசும் ஊக்குவிப்புப் பரிசாக வழங்கப்பட்டது.

பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட சைக்கிளோட்டப்போட்டிகளில் பங்கேற்று 2016 ஆம் ஆண்டில் 6 ஆம் இடத்தையும், 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் 5 ஆம் இடத்தையும், 2019 இல் 9 ஆம் இடத்தையும் பெற்றிருந்த தமிழரசி 2018 ஆம் ஆண்டு மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட சகல பிரிவினருக்குமான சைக்கிளோட்டப்போட்டியில் பங்கேற்று தங்கப்பதக்கத்தையும், 2019 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட சகல பிரிவினருக்குமான சைக்கிளோட்டப் போட்டியில் பங்கேற்று வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளார்.

இப்போட்டிகளில் தமிழரசி வெளிப்படுத்திய திறமைகளே கலப்பஞ்சல் போட்டிக்கான இலங்கை அணியில் பங்குபற்றும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த.உயர்தரம் கலைப்பிரிவில் தோற்றிய தமிழரசி 2ஏ, பி பெறுபேற்றைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 97 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். (ஐ)

# சம்பியன் கிண்ணத்துக்கு முத்தமிட்டார் எலெனா!

ஹோபர்ட் சர்வதேச ரென்னிஸ் தொடரின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில், கஸகஸ்தானின் எலெனா ரைபாகினா சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

நேற்று சனிக்கிழமை நடைபெற்ற மகுடத்திற்கான இறுதிப் போட்டியில், கஸகஸ்தானின் எலெனா ரைபாகினா, சீனாவின் ஸாங் ஷுவாய்யை எதிர்த்து விளையாடினார்.

இரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டே இரசிகர்களை விறுவிறுப்பின் உச்சத்திற்கு கொண்டுச்சென்றது.

டை பிரேக் வரை நகர்ந்த பரபரப்பான முதல் செற்றில், விட்டுக்கொடுக்காமல் ஆக்ரோஷமாக விளையாடிய எலெனா ரைபாகினா இறுதியில் செற்றை 7 – 6 என கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற்றில், இரசிகர்களின் எதிர்பார்ப்பு எகிறியது. இதிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய எலெனா ரைபாகினா, செற்றை 6 – 3 கைப்பற்றி சம்பியன் பட்டத்தைப் வென்றார்.

# ஒருநாள் கிரிக்கெட்டில் கால்பதிக்க ஆசைப்படுகின்றார் டி வில்லியர்ஸ்!

கிரிக்கெட் உலகில் 360 டிகரி எனச் செல்லமாக அழைக்கப்படும் தென்னாபிரிக்காவின் அதிரடி துடுப்பாட்ட வீரர் ஏபி டிவில்லியர்ஸ், ஒருநாள் கிரிக்கெட்டிலும் விளையாடுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2018ஆம் ஆண்டு திடீரெனச் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற ஏபி டிவில்லியர்ஸ், மனம் மாறி தற்போது மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் விளையாட ஆர்வம் காட்டி வருகின்றார்.

இதற்காக ஏபி டிவில்லியர்ஸ், தனது விருப்பதை வெளியிட்டிருந்தார். எனினும், உலகக்கிண்ணத் தொடரின்போது அவரது விருப்பம் நிராகரிக்கப்பட்டது.

எனினும், தற்போது தென்னாபிரிக்க அணியில் மாற்றம் கொண்டு வர முன்னாள் வீரர்களான கிரேம் ஸ்மித்தை இயக்குநராகவும், மார்க் பவுச்சரை தலைமை பயிற்சியாளராகவும் நியமித்தமையையடுத்து, ஏபி டிவில்லியர்ஸின் ஆசை நிறைவேறத் தொடங்கியுள்ளது எனலாம்.

அத்தோடு, நடப்பு ஆண்டு நடைபெறவுள்ள ரி – 20 உலகக்கிண்ண தொடரில் விளையாட வேண்டுமென்ற ஏபி டிவில்லியர்ஸின் ஆசையை, அணியின் மூத்த வீரரான டு பிளெஸிஸ்சும் வரவேற்றுள்ளார்.

தற்போது தனது மீள் வருகையை நிரூபித்துக் காட்ட வேண்டிய நிலையில் உள்ள டிவில்லியர்ஸ், ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் பிக் பேஷ் தொடரில் களமிறங்கியுள்ளார். அத்தோடு முதல் போட்டியில் தனது அதிரடித் துடுப்பாட்டத்தை மீண்டும் இரசிகர்களின் கண் முன்னே கொண்டுவந்தார்.

இதற்கிடையில் ஒருநாள் கிரிக்கெட்டிலும் விளையாடுவதற்கு ஏபி டிவில்லியர்ஸ், விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில் –

நான் 50 ஓவர் கிரிக்கெட்டில் விளையாட விரும்புகிறேன். அதில் எந்தவொரு பிரச்சினையும் இருக்காது. நான் எப்போதுமே தென்னாபிரிக்காவுக்காக விளையாட விரும்புகிறேன். சர்வதேச கிரிக்கெட் விளையாடுவது மிகப்பெரிய கௌரவம்.

நான் மார்க் பவுச்சர் மற்றும் ஸ்மித்துடன் பேச்சு நடத்தியுள்ளேன். மேலும் சிலர் அதில் இணைந்திருந்தார்கள். ஆகவே, சாத்தியக்கூறு உள்ளது என்ற நம்பிக்கை உள்ளது. நான் விளையாடுவதற்கான சில சிறந்த விவாதம் நடைபெற்றது. நான் விளையாடும் ரி – 20 லீக் போட்டிகளில் சிறப்பாக ஓட்டங்கள் அடிக்க வேண்டும்.

டிசெம்பரில் இருந்து சில டெஸ்ட் போட்டிகளை பார்த்தேன். கிரிக்கெட்டில் இருந்து விலகி இருப்பது மிகவும் சிறந்தது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், நினைவுகள் எனது வாழ்க்கையை மாற்றின. 11 மாதங்கள் நான் விளையாட விரும்பவில்லை. இது அதிகப்படியானது. ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து முற்றிலுமாக ஒதுங்கி இருக்க விரும்பவில்லை. ஆனால், டெஸ்ட் கிரிக்கெட் முடிந்துவிட்டது எனக் கூறினார்.



# ஆஸ்திரேலியாவுக்கு இந்திய அணி பதிலடி




ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்ற 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையிலான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ராஜ்கோட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்ரேலிய அணி முதலில் பந்துவீச்சைத் தெரிவு செய்தது. இதன்படி, முதலில் களமிறங்கிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 340 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணி சார்பில் சஹிர் தவான் 96 ஓட்டங்களையும், லோகேஸ் ராகுல் 80 ஓட்டங்களையும் அணித்தலைவர் விராட் கோலி 78 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் அடம் ஷம்பா 3 விக்கெட்டுகளையும் கனே ரிச்சர்ட்சன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 341ஓட்டங்களை இலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆஸ்ரேலிய அணி 49.1ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 304 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. இதனால் 36 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா தோல்வியடைந்தது.

அணிசார்பாக, ஶ்ரீவன் சுமித் அதிகபட்சமாக 98 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் மொஹமட் ஷமி 3 விக்கெட்டுகளையும் குல்தீப் யாதவ், ரவீந்திட ஜடேஜா, ஷைனி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி ஒருநாள் தொடரை 1 – 1 என சமன் செய்துள்ளது.

# உப்பை பயன்படுத்தி முகத்தில் உள்ள கரும்புள்ளிகளை நீக்குவது எப்படி?



பெண்களுக்கு முகம் அழகு மட்டுமல்ல, அது அவர்களின் தன்னம்பிக்கையின் சாட்சி. சில பெண்களுக்கு முகத்தில் உள்ள கரும்புள்ளிகளால் சருமம் பொலிவிழந்து காணப்படும். அவர்கள் உப்பை பயன்படுத்தி கரும்புள்ளிகளை நீக்க முடியும் என்று ஒரு ஆய்வு கூறியுள்ளது. ஒரு முறை முயற்சித்துப் பார்ப்பது தப்பில்லை. இதோ கீழே விளக்கம் :-

1. மேசைக்கரண்டி உப்பை ரோஸ் வோட்டர் சேர்த்து கலந்து, இதனை கொண்டு முகத்தை மென்மையாக ஸ்கரப் செய்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இப்படி வாரம் ஒரு முறை செய்து வந்தால், முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் நீங்கிவிடும்.

2. மேசைக்கரண்டி உப்பு மற்றும் சர்க்கரையை கலந்து, ஈரமான முகத்தில் அவற்றைக் கொண்டு மென்மையாக மசாஜ் செய்து, 15 நிமிடம் கழித்து, ஈரமான பஞ்சு கொண்டு துடைத்து எடுத்து, பின் மாஸ்சுரைசர் தடவவும். இப்படி செய்வதால், கரும்புள்ளிகள் அதிகமாவதைத் தடுக்கலாம்.

3. தேன் சருமத்தை மென்மையாக வைத்துக் கொள்ளும். அதற்கு 1 மேசைக் கரண்டி தேனில், 2 மேசைக்கரண்டி கல் உப்பு சேர்த்து கலந்து, பாதிக்கப்பட்ட பகுதியில் தடவி மென்மையாக ஸ்கரப் செய்ய வேண்டும். இப்படி வாரத்திற்கு இரண்டு முறை செய்து வந்தால், நல்ல பலனைக் காணலாம்.

4. ஒரு பாத்திரத்தில் 1 மேசைக்கரண்டி கடலை மாவு, 2 மேசைக்கரண்டி பால் மற்றும் 1 மேசைக்கரண்டி உப்பு சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தடவி 15 நிமிடம் நன்கு உலர வைத்து, பின் தேய்த்து கழுவ, கரும்புள்ளிகள் நீங்கும். இப்படி வாரம் 2 - 3 முறை செய்து வந்தால், நல்ல மாற்றத்தைக் காணலாம்.

# மகளிருக்கு மட்டும்...!

# கூந்தல் வளர்ச்சிக்கு உதவும்

## கேரட் எண்ணெய் தயாரிப்பது எப்படி?



அழகான கூந்தல் இருக்க வேண்டும் என்ற ஆசையா? அதனுடன் சேர்த்து உங்கள் சருமமும் பொலிவாக இருக்க வேண்டுமா? அப்படி என்றால் நீங்கள் கேரட் எண்ணெய் தயாரித்து பயன்படுத்தலாம். இந்த கேரட் எண்ணெயைப் பயன்படுத்துவதால் நீங்கள் இளமையாகவும் தோன்ற முடியும். பேஸ்புக்கில் எங்களது செய்திகளை உடனுக்குடன் படிக்க க்ளிக் செய்யவும் ஏன் நீங்களே தயாரிக்க வேண்டும்?

கேரட் எண்ணெய், வறண்ட சேதமடைந்த கூந்தலுக்கு ஒரு இயற்கையான புத்துணர்ச்சியைத் தருகிறது. மேலும் இதில் பல வித நன்மைகளும் உள்ளன. கேரட் எண்ணெயில் வைட்டமின் ஈ, வைடமின் ஏ, பீட்டா கரோடின் மற்றும் இதர ஊட்டச்சத்துகள் இருப்பதால் சருமத்தில் ஏற்படும் வெடிப்புகள், புண் போன்றவை மறைகின்றது. இந்த பல்வேறு ஊட்டச்சத்துகள் வயது முதிர்விற்கான அறிகுறிகளைக் குறைக்கிறது, பல்வேறு சரும பிரச்சினைகளையும் போக்க உதவுகிறது. கேரட் எண்ணெய் பயன்படுத்துவதால் பல்வேறு நன்மைகள் உடலுக்குக் கிடைக்கிறது. கூந்தல் மற்றும் சருமத்திற்கு சிறந்த முறையில் பலன் அளிக்க உதவுகிறது. குளிர் காலத்தில் மற்றும் மழைக் காலங்களில் சருமம் வறண்டு இருப்பதால், கேரட் எண்ணெய் பயன்படுத்தி சருமத்திற்கு ஈரப்பதம் அளிக்கலாம். குறிப்பாக பாத வெடிப்புகள் மற்றும் தோல் உரிவது போன்றவை மழைக் காலங்களில் அடிக்கடி ஏற்படும் பாதிப்பாகும். இதனைப் போக்க கேரட் எண்ணெய் சிறந்த முறையில் உதவுகிறது

தயாரிக்கும் முறை:-

தேவையான பொருள்கள்

கேரட் அல்லது ஆர்கானிக் கேரட் - 2 அல்லது 3.

ஆலிவ் எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்

கேரட் துருவி . வடிகட்டி . கிராக் பாட் அல்லது பேன் ஒரு சுத்தமான கண்ணாடி குடுவை

செய்முறை :-

கேரட்டை தோல் சீவி துருவிக் கொள்ளவும். துருவிய கேரட்டை ஒரு பேன் அல்லது கிராக் பாட்டில் போடவும். உங்களுக்கு விருப்பமான ஓலிவ் எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய்யை சேர்க்கவும். கேரட் துருவல் முழுவதும் மூழ்கும் அளவிற்கு எண்ணெய்யை ஊற்றவும். இப்படி செய்வதால் கேரட் முழுவதும் எண்ணெயில் ஊறி அடியில் தங்கி விடும். நன்றாக ஊறியவுடன் கேரட் மிகவும் மென்மையாக மாறி, அந்த எண்ணெய் முழுவதும் ஆரஞ்சு நிறமாக மாறி விடும். அப்போது அடுப்பை நிறுத்திவிட்டு ஆற விடவும். அடுத்த 24 மணி நேரம் இந்த கேரட் எண்ணெயிலேயே ஊறட்டும். ஆறியவுடன், ஒரு வடிகட்டி பயன்படுத்தி எண்ணெய்யை வடிகட்டிக் கொள்ளவும். பிறகு அதனை ஒரு கண்ணாடி குடுவையில ஊற்றி வைக்கவும்.

இப்படி தயாரிக்கும் கேரட் எண்ணெய் கூந்தலுக்கு பல அற்புதங்களை செய்கிறது. தலைக்கு ஷாம்பூ தேய்த்து குளிப்பதற்கு முன்னால் இந்த எண்ணெய்யை தலையில் தடவிக் கொள்ளலாம். இப்படி செய்வதால் உங்கள் கூந்தல் எண்ணெய்யை உறிஞ்சி, தலை முடிக்கு ஈரப்பதம் அளித்து, அழகாக்கிறது. இந்த கேரட் எண்ணெயில் உள்ள வைட்டமின் ஈ மற்றும் பீட்டா கரோடின் போன்றவை சிறந்த கண்டினராக செயல்படுகிறது. இதில் இருக்கும் வைட்டமின் ஈ சத்து, உங்கள் கூந்தல் மற்றும் உச்சந்தலையை சேதங்களில் இருந்து பாதுகாக்கிறது. மேலும் இது முடி உதிர்வைத் தடுத்து, கூந்தல் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

# கோதுமை பாயாசம் செய்வது எப்படி?



இந்தியாவின் தென் மாநிலங்களில் நடைபெறும் பண்டிகைகள் சுப நிகழ்ச்சிகளில் கண்டிப்பாக இந்த பாயாசம் இடம்பெற்று விடும். குறிப்பாக கர்நாடகாவில் இது ஒரு ஸ்பெல் ரெசிபி. நமது உடலுக்கும் ஏராளமான நன்மைகளை தரும் இந்த டெசர்ட் கண்டிப்பாக உங்களுக்கும் பிடிக்கும். சரி வாங்க இப்பொழுது இந்த கோதி பாயாச ரெசிபியை எப்படி செய்வது என்பதை பார்ப்போம்.

உடைத்த கோதுமை - 1 கப்
உலர்ந்த பழங்கள் (பாதாம் பருப்பு + முந்திரி பருப்பு + உலர்ந்த திராட்சை பழங்கள்)
வெல்லம் - 1 கப்
நெய் - 2 மேசைக்கரண்டி
தேங்காய் துருவல் - 1 கப்
பால் - 1/2 பௌல்
தண்ணீர் - 3 கப்
பாப்பி விதைகள் - 1 மேசைக்கரண்டி
ஏலக்காய் பொடி - 1 மேசைக்கரண்டி

1. ஒரு பௌலை எடுத்து கொள்ளுங்கள். அதில் உடைத்த கோதுமை மற்றும் அது மூழ்கும் அளவுக்குத் தண்ணீர் சேர்த்து ஒரு மணி நேரம் ஊற வையுங்கள். பிறகு தண்ணீரை வடிகட்டி கொள்ளவும்.

2. ஒரு குக்கரை எடுத்து கொள்ளுங்கள். அதில் இப்பொழுது ஊற வைத்த உடைத்த கோதுமையை குக்கரில் சேர்க்கவும். அதனுடன் தண்ணீர் சேர்த்து பருப்பு வேகவைப்பது போல, 3 விசில் வரும்வரை வேகவிடவும்.

3. விசில் வந்ததும் குக்கரைத் திறக்காமல் அப்படியே பத்து நிமிடங்கள் வரை ஆறவிடுங்கள்.

4. அது ஆறிக்கொண்டிருக்கும் அதே நேரத்தில், அடுப்பில் கடாயை வைத்து கசகசாவை லேசாக வறுத்து தனியே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

5. அதே கடாயில், வெல்லத்தை சேருங்கள். அதனுடன் ஒரு கப் தண்ணீர் சேர்த்து கொள்ளுங்கள் 10 நிமிடங்கள் வரை வெல்லம் முழுவதுமாக கரையும் வரை சூடுபடுத்தவும்.

6. வெல்லப்பாகு ரெடியாகிக் கொண்டிருக்கும்போதே ஒரு மிக்ஸி ஜாரில் தேங்காய் துருவல் மற்றும் வறுத்த கசகசாவை சேர்த்து, சிறிது தண்ணீர் விட்டு மைய அரைக்க வேண்டும்.

7. இந்த அரைத்த விழுதை கொதித்துக் கொண்டிருக்கிற வெல்லப்பாகில் போட்டு, நன்றாகக் கலக்கவும்.

8. மூடியைக் கொண்டு மூடி மிதமான தீயில் 2 - 3 நிமிடங்கள் அந்த கலவையை வேகவிடவும். அதன்பின், அந்த கலவையோடு வேகவைத்த உடைத்த கோதுமையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். நன்கு கிளறி 5 நிமிடங்கள் வரை வேக விட்டதும் ஏலக்காய் பொடி சேர்த்து ஒருமுறை நன்கு கிளறி விடுங்கள்.


9. அடுத்ததாக, நெய்யில் வறுத்த முந்திரி, திராட்சை ஆகிய வற்றை சேர்க்கவும். அதோடு இரண்டு ஸ்பூன் நெய் சேர்த்து கிளறிவிட்டு, பின் கடைசியாக அதில் பால் சேருங்கள். பாலை நன்கு கலந்துவிட்ட பின், 5 நிமிடங்கள் மிதமான சூட்டில் வைத்து வேகவிட்டு இறக்குங்கள்.

10. தித்திக்கும் கோதுமை பாயாச தயார்.

11. பாயாசத்தை வேறு பௌலிற்கு மாற்றி பின் பரிமாறலாம்.

# புதிரான சீன வைரஸ்: நாம் எந்த அளவுக்கு கவலைப்பட வேண்டும்?

ஜேம்ஸ் கல்லாகெர்



ஒரு புதிரான வைரஸ் – அறிவியலில் முன்பு அறியப்படாத வைரஸ் – சீனாவில் வுஹான் நகரில் தீவிர நுரையீரல் நோயை உருவாக்கி வருகிறது.

இந்த நோயால் 50க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் ஏழு பேர் நிலைமை இப்போது கவலைக்கிடமாக உள்ளது.

நோயாளிகளுக்கு நிமோனியா காய்ச்சலை ஏற்படுத்தக் கூடிய, புதியதொரு வைரஸ் இப்போது பரவத் தொடங்கியுள்ளது. இது மிகவும் கவலையை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது. உலகெங்கும் சுகாதாரத் துறை அதிகாரிகள் மிகவும் விழிப்புடன் இருக்கிறார்கள்.

இது இன்று வந்துவிட்டு, நாளை போய்விடும் வகையைச் சேர்ந்த வைரஸ் தாக்குதலா அல்லது பெரிய ஆபத்தை ஏற்படுத்தும் நோயின் அறிகுறியா என்று கேள்வி எழுந்துள்ளது.

**இது என்ன வைரஸ்?**

நோயாளிகளிடம் இருந்து வைரல் சாம்பிள் எடுத்து பரிசோதனை நிலையங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இது சுவாசக் குழாயைப் பாதிக்கும் வகையிலான கரோனா வைரஸ் எனப்படும் தொற்று என்று சீனாவில் உள்ள மற்றும் உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் முடிவுக்கு வந்துள்ளனர்.

கரோனா வைரஸ் என்பவை பரவலான தொகுப்பைச் சேர்ந்தவை. ஆனால் ஆறு புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை சேர்த்தால் ஏழு வைரஸ்கள் மட்டுமே மக்களைப் பாதிக்கக் கூடியவை.

2002 இல் சீனாவில் இருந்து பரவத் தொடங்கிய, சார்ஸ் எனப்படும் தீவிர சுவாசக் கோளாறால் 8,098 பேர் பாதிக்கப்பட்டதில் 774 பேர் உயிரிழந்தனர்.

"சார்ஸ் பற்றி நன்கு நினைவு இருக்கிறது. அதனால் தான் பயம் அதிகமாக உள்ளது. ஆனால் அதுபோன்ற நோய்களை எதிர்கொள்ள நாம் மிக நன்றாகவே தயாராக இருக்கிறோம்" என்று வெல்கம் டிரஸ்ட்டை சேர்ந்த டாக்டர் ஜோசி கோல்டிங் கூறுகிறார்.

**அது மோசமான வைரஸா?**

கரோனா வைரஸ்கள் லேசான சளியில் தொடங்கி மரணத்தை ஏற்படுத்துவது வரையிலான பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

இந்தப் புதிய வைரஸ், இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட வகையைச் சேர்ந்ததாகத் தோன்றுகிறது.

"புதிய கரோனா வைரஸை பார்க்கும்போது, அறிகுறிகள் எவ்வளவு தீவிரமாக இருக்கின்றன என்பதைக் காண நாங்கள் விரும்புகிறோம். இது சளி போன்றதைவிட தீவிரமான அறிகுறியாக இருக்கலாம், கவலை ஏற்படுத்துவதாக இருக்கலாம், ஆனால் சார்ஸ் போல அதிதீவிரமானதாக இல்லாமல்



இருக்கலாம்" என்று எடின்பர்க் பல்கலைக்கழக பேராசிரியர் மார்க் வுல்ஹவுஸ் கூறுகிறார்.

ஆறு கரோனா வைரஸ்கள் மக்களை பாதிப்பன என அறியப்பட்டுள்ளது.

**இது எங்கிருந்து வந்தது?**

புதிய வைரஸ்கள் எப்போதும் கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கவனிக்கப்படாமல் இருந்த ஒரு கிருமி தொகுப்பில் இருந்து அவை மனிதர்களுக்குப் பரவுகின்றன.

"கடந்த காலத்தில் தொற்றுநோய் பரவியதை நாம் பார்த்தால், அது கரோனா வைரஸாக இருந்தால், விலங்குகள் காப்பகப் பகுதியில் இருந்துதான் வந்திருக்கும்" என்று நொட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் நச்சுயிரியல் வல்லுநராக இருக்கும் பேராசிரியர் ஜொனாதன் பால் கூறுகிறார்.

சார்ஸ் கிருமி புனுகுப் பூனையிடம் இருந்து மனிதர்களுக்குப் பரவியது.

2012இல் உருவாகிய மெர்ஸ் நோயால் 2,494 பேர் பாதிக்கப்பட்டதில் 858 பேர் உயிரிழந்தனர். இது ஒற்றைத் திமில் கொண்ட ஒட்டகங்களிடம் இருந்து பரவியது.

**எந்த விலங்கு?**

கிருமி உருவாகும் விலங்குகள் காப்பகம் எது என அடையாளம் கண்டுவிட்டால், அதை தடுப்பதற்கான நடவடிக்கை எடுப்பது எளிதாகிவிடுகிறது.

இந்த நோயாளிகளுக்கு வுஹானில் உள்ள தெற்கு சீனா கடல் உணவு மொத்த விற்பனை அங்காடியுடன் தொடர்பு இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. கடலுக்குச் செல்பவர்கள் (துருவப் பகுதி திமிங்கலம் போன்ற) கரோனா வைரஸ் தொற்றுக்கு ஆளாவது உண்டு. அங்காடியில் கோழி, வௌவால், முயல், பாம்பு போன்ற உயிரினங்களும் வைத்திருக்கிறார்கள். அவையும் வைரஸ்கள் உருவாக வாய்ப்பை ஏற்படுத்தும்.

**இந்த வைரஸ் ஏன் சீனாவில் பரவுகிறது ?**

மக்கள் தொகை நெருக்கத்தின் காரணமாகவும், இந்த வைரஸ் உள்ள பிராணிகளுடன் அதிக தொடர்பில் இருப்பதாலும் சீனாவில் அதிக பாதிப்பு ஏற்படுகிறது என்று பேராசிரியர் வுல்ஹவுஸ் கூறினார்.

"அடுத்த நோய்க் கிருமி சீனாவிலோ அல்லது அந்தப் பகுதியிலோ இருந்தால் யாரும் ஆச்சரியப்படப் போவதில்லை" என்கிறார் அவர்.

எவ்வளவு எளிதாக அது பரவும்.

ஒரு மனிதரிடம் இருந்து இன்னொருவருக்குப் பரவக் கூடியதாக இந்த வைரஸ் இல்லை என்பது உறுதியாகத் தெரிகிறது.

நுரையீரல்களைகிருமித்தொற்று தாக்கினால், இருமல், சளி போன்றவற்றாலும், அந்த நோயாளிக்கு அருகில் சென்றாலும் பாதிப்பு ஏற்படுவது கவலைக்குரிய பெரிய விஷயம்.

மனிதர்களுக்கு இடையில் இது பரவக் கூடியதாக இருந்தால், அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும்போது நெருங்கிச் செல்லும் மருத்துவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அப்படி எதுவும் நடக்கவில்லை என்று சீன அதிகாரிகள் கூறுகின்றனர்.

இருந்தபோதிலும், மனிதர்களுக்கு இடையில் இது பரவுமா என்பதை தீர்மானிக்க இந்த அவகாசம் போதுமானதல்ல என்று சில நிபுணர்கள் கூறுகின்றனர்.

"குறுகிய காலத்திற்குள் விலங்குகளிடம் இருந்து



மனிதர்கள் 59 பேருக்குத் தொற்றுகள் ஏற்படும், அது உள்மன உணர்வு ரீதியில் அதிகமானது. அதற்கான விடை இப்போது தெரியாது" என்கிறார் பேராசிரியர் பால்.

"சந்தேகத்தைவிட நான் எச்சரிக்கையாக இருக்கிறேன். இவ்வளவு சீக்கிரத்தில் அதைச் சொல்லிவிட முடியாது பெரும்பாலான கரோனா வைரஸ்கள் உண்மையில் தொற்றக் கூடியவை என்பதுதான் என் ஆரம்பகட்ட கவலையாக இருக்கிறது" எனஅறு பேராசிரியர் வுல்ஹவுஸ் கூறியுள்ளார்.

**இது எவ்வளவு வேகமாகப் பரவும்?**

இதுவரை அவ்வளவு வேகம் இல்லை.

59 நோயாளிகளில் அனைவருக்கும் 2019 டிசெம்பர் 12 முதல் 29 ஆம் திகதிக்குள் அறிகுறிகள் தோன்றியுள்ளன.

அதன்பிறகு புதிய நோயாளிகள் யாருக்கும் இந்தப் பாதிப்பு ஏற்படவில்லை.

"இந்தப் பாதிப்பு ஏற்பட்ட நோயாளிகள் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்பது நல்ல விஷயம்" என்று டாக்டர் கோல்டிங் கூறுகிறார்.

"இதை முக்கியமான விஷயமாக சீனா எடுத்துக் கொண்டுள்ளது, இது கட்டுப்படுத்தப்படும், பொறுத்திருந்து பார்ப்போம்" என்கிறார் அவர்.

இருந்தபோதிலும், இந்த மாதத்தின் பிற்பகுதியில் சீனப் புத்தாண்டுக்காக பல லட்சம் பேர் சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளும் நிலையில்,



இந்த வைரஸ் பரவக் கூடுமோ என்ற கவலையும் இருக்கிறது.

**சீன அரசு நிர்வாகம் எவ்வளவு வேகமாக நடவடிக்கை எடுத்துள்ளது?**

உடல் வெப்ப நிலையை பரிசோதிப்பதன் மூலம் இந்தப் பாதிப்பு உள்ளவர்களை அடையாளம் காண முடியும். கிருமி பரவும் ஆபத்தை தவிர்க்கும் நோக்கில், இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு தனிப் பகுதியில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

நோயாளிகளுடன் தொடர்பில் இருந்த 150க்கும் மேற்பட்டவர்களுக்கு அறிகுறி ஏதும் தென்படுகிறதா என்றும் கண்காணிக்கப் படுகிறது.

பயணிகளுக்கு பரிசோதனை செய்வதற்காக வெப்பநிலை பரிசோதனை போன்ற கூடுதல் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.

சுத்தம் செய்து, கிருமி நீக்கம் செய்வதற்காக கடல் உணவு அங்காடி வளாகம் மூடப்பட்டுள்ளது.

நிபுணர்கள் எந்த அளவுக்கு கவலையில் உள்ளனர்?

"இப்போதைக்கு, நமக்கு கூடுதல் தகவல்கள் கிடைக்கும் வரையில், நாம் எவ்வளவு அக்கறையுடன் இருக்க வேண்டும் என்பதைச் சொல்வது உண்மையிலேயே கடினமானது" என்று டாக்டர் கோல்டிங் கூறுகிறார்.

"எங்கே தொடங்கியது என்பதை உறுதி செய்யாத வரையில், எங்களுக்கு அது எளிதானதாக இருக்கப் போவதில்லை" என்கிறார் அவர்.

"மனிதர்களை முதன்முறையாக எந்த வைரஸ் தாக்கினாலும் நாம் கவலைப்பட்டாக வேண்டியுள்ளது. ஏனெனில் முதலாவது தடையை நாம் தாண்டியாக வேண்டும்" என்று பேராசிரியர் பால் கூறுகிறார்.

''மனிதனின் உயிரணுவுக்குள் சென்று, பிரியத் தொடங்கிவிட்டால், வேகமாக, அதிக ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் பிரியக் கூடியதாக அது மாறிவிடும்.''

"அந்த வாய்ப்பை வைரஸுக்கு நாம் கொடுத்துவிடக் கூடாது" என்கிறார் அவர்.

*



# ஆயிரம் வருடம் வாழும் கிங்க்கோ மரங்கள் இரகசியத்தைக் கண்டறிந்த விஞ்ஞானிகள்

கிங்கோ மரங்கள் எப்படி 1000 வருடங்களுக்கும் மேலாக உயிரோடு உள் ளன என்னும் இரகசியத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

அந்த மரங்கள் நோய்கள் மற்றும் வறட்சியிலிருந்து தங்களைக் காத்து கொள்ள ஒரு விதமான ரசாயனங்களை உற்பத்தி செய்து கொள்கின்றன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த கிங்க்கோ மரங்கள் பூங்காக்கள் மற்றும் தோட்டங்களில் வளர்க்கப்படுகின்றன. ஆனால் இந்த வகை மரங்கள் காடுகளில் அழிந்து வருகின்றன.

இந்த மரங்கள் அதிக நாள்கள் வாழ்வதற்கான ரகசியம் என்னவென்றால், ஆரோக்கியமான நோய் எதிர்ப்பு அமைப்பு மற்றும் வயதாகும் மரபு இல்லாதது என வடக்கு டெக்ஸஸ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த ரிச்சர்ச் டிக்ஸன் கூறுகிறார்.

இந்த கிங்க்கோ மரங்கள் வயதானாலும் தங்களை எந்த தீங்கும் பாதிக்காமல் பார்த்துக் கொள்கின்றன என்கிறார் ரிச்சர்ட்.

இந்த மரங்களின் விசேட அம்சங்கள்: –

மெதுவாக வளர்ந்தாலும் பெரிதாக வளரக்கூடியவை.

இலையுதிர் காலத்தில் கண்ணைக் கவரும் மஞ்சள் நிற இலைகள்.

இந்த மரங்கள் சீனாவை பூர்விகமாக கொண்டவை.

பழமைவாய்ந்த மரங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இதன் படிமங்கள் டைனசர் காலத்திலிருந்து காணப்படுகின்றன.

இந்த மரம் குறித்து அமெரிக்க மற்றும் சீனாவின் விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.



15 வயது முதல் 667 வயது வரை உள்ள இந்த மரங்களின் பட்டைகள், அணுக்கள், இலைகள் மற்றும் விதைகளை ஆராய்ந்தனர்.

அந்த ஆய்வில், பூச்சிகள் மற்றும் வறட்சியால் ஏற்படக்கூடிய மன அழுத்தத்திலிருந்து தன்னை காத்துக் கொள்ள இந்த மரம் ஒரு விதமான இரசாயனத்தை உற்பத்தி செய்கிறது எனத் தெரியவந்தது.

அதேபோன்று புற்கள் மற்றும் பிற தாவரங்கள் போல குறிப்பிட்ட ஒரு காலம் வந்ததும் வயதாகும் தன்மையும் இந்த தாவரங்களுக்கு வருவதில்லை.

பொதுவாக இத்தனை ஆண்டுகள் வாழ்ந்த மரங்கள் பனி மற்றும் மின்னல்களால் தாக்கப்பட்டிருக்கக்கூடும். ஆனால் இந்த மரத்தில் ஆரோக்கியமான வளர்ச்சி காணப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த கிங்க்கோ மரங்களின் போன்றே நீண்ட நாள்களுக்கு வாழும் பிற மரங்களும் இதே சிறப்புகளை பெற்றிருக்கலாம் என ரிச்சர்ட் கூறுகிறார்.

எங்களின் இந்த ஆராய்ச்சி பின்வரும் காலங்களில், நீண்டகாலம் வாழும் மரங்களின் ஆயுள் ரகசியம் குறித்து மேலும் பல தகவல்களை அளிக்கக்கூடிய ஆராய்ச்சிக்கு வித்திடும் என தெரிவிக்கிறார் ரச்சர்ட்.

இம்மாதிரி நீண்டகாலம் வாழ்வது, உணவு, வெளிச்சம் மற்றும் நீர் நிலையாக கிடைப்பதால் மட்டும் சாத்தியமில்லை; மெதுவான வளர்ச்சி விகிதம், அணுக்களின் அமைப்பு மற்றும் பூச்சி, வறட்சி, நோய்கள், பருவநிலை பாதிப்பு, இயற்கை சீற்றங்கள் ஆகியவற்றை தாங்கும் வலிமை இது எல்லாவற்றுடன் தொடர்புடையது என்றும் கூறுகின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

> “பூச்சிகள் மற்றும் வறட்சியால் ஏற்படக்கூடிய மன அழுத்தத்திலிருந்து தன்னை காத்துக் கொள்ள இந்த மரம் ஒரு விதமான இரசா யனத்தை உற்பத்தி செய்கிறது எனத் தெரியவந்தது. அதேபோன்று புற்கள் மற்றும் பிற தாவரங்கள் போல குறிப்பிட்ட ஒரு காலம் வந்ததும் வயதாகும் தன்மையும் இந்த தாவரங்களுக்கு வருவதில்லை.”

# பாலுணர்வு மிகுந்த 100 வயது ஆமை டீகோ: இனத்தை வளர்க்கும் பணி முடித்துக் காடு திரும்புகிறது



நூற்றுக் கணக்கில் வாரிசுகளை ஈன்று நூறு வயது டீகோ.

அதீத பாலுணர்வு மிக்க டீகோ என்ற ஆண் ஆமை, தன் இனத்தை அழியாமல் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு சுமார் 800 குஞ்சுகளை உருவாக்கிய பிறகு தற்போது தனது 100ஆவது வயதில் தன் சொந்தக் காட்டுக்கு திரும்புகிறது.

கிராண்ட் டார்ட்டாய்ஸ் எனப்படும் நில ஆமை வகையைச் சேர்ந்த டீகோவின் பூர்வீகம் அமெரிக்க கண்டத்தில், ஈக்வடார் தீவில் உள்ள கோலபாகோஸ் தீவுகள்.

சாந்தா குரூஸ் தீவில் இனப்பெருக்கத்தில் ஈடுபடும் திட்டத்துக்காக 1960களில் தேர்வு செய்யப்பட்ட 14 ஆண் ஆமைகளில் டீகோவும் ஒன்று.

இந்த இனப்பெருக்கத் திட்டத்தின் கீழ் 2000 தரை ஆமைகள் உருவாக்கப்பட்டு அந்த இனம் அழிவில் இருந்து மீட்கப்பட்டது. இந்த வெற்றியில் டீகோவின் அதீத பாலுணர்வுக்கு முக்கியப் பங்கு இருப்பதாகப் பாராட்டப்பட்டது.

டீகோ நூற்றுக்கணக்கான வாரிசுகளை உருவாக்கியது. சில கணக்குகளின்படி அந்த எண்ணிக்கை சுமார் 800.


இந்தத் திட்டம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது. இதையடுத்து, டீகோ தமது பூர்வீகத் தீவான கோலபாகோஸ் தீவுக் கூட்டத்தின் எஸ்பனோலா தீவுக்கு இந்த ஆண்டு திரும்பும் என்று கேலபாகோஸ் தேசியப் பூங்கா சேவை தெரிவித்துள்ளது.

## 40 சதவீத ஆமைகளுக்குத் தந்தை

1,800 ஆமைகள் கொண்டதாக அதன் சமூகம் அங்கே வலுவானதாக இருக்கிறது. இவற்றில் குறைந்தது 40 சதவீத ஆமைகளுக்கு டீகோதான் தந்தை என்கிறார்கள் தேசியப்பூங்காவின் வனச்சரகர்கள்.

எஸ்பனோலாவுக்கு தாங்கள் அனுப்பிய ஆமைகளில் பெரும்பாலானவைக்கு பங்களித்தது டீகோதான் என்று பூங்காவின் இயக்குநர் ஜோர்ஜ் காரியோன் ஏ.எஃப்.பி. செய்தி முகமையிடம் தெரிவித்தார்.

தமது இயற்கையான வாழ்விடத்துக்கு டீகோ திரும்புவதால் மகிழ்ச்சி நிலவுவதாக அவர் மேலும் கூறினார்.



50 ஆண்டுகளுக்கு முன்பு எஸ்பனோலாவில் டீகோவின் இனத்தில் இரண்டு ஆண் ஆமைகளும், 12 பெண் ஆமைகளும் மட்டுமே இருந்தன. **Chflonoiis hoofnsis** என்ற அறிவியல் பெயர் கொண்ட ஆமை இனத்தை பாதுகாக்கும் பணியில் அப்போதுதான் டீகோ ஈடுபடுத்தப்பட்டது. சொந்த இடத்துக்கு திரும்புவதற்கு முன்பாக தற்போது டீகோ தனிமையில் உள்ளது.

தனித்துவமான காட்டுயிர்கள், தாவரங்கள் கொண்ட கேலபாகோஸ் தீவுகள் யுனெஸ்கோ உலகப் பண்பாட்டுத் தலம் ஆகும். அதன் பல்லுயிர் வளம் காண உலகம் முழுவதும் இருந்து சுற்றுலாப் பயணிகள் அங்கு வருகிறார்கள்.

# உலகின் ஆபத்தான சிறைச்சாலைகள்

## பூலோக நரகங்கள் பற்றி ஒரு பார்வை...!

உலகம் முழுவதும் தவறு செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கும் இடமாக இருப்பது சிறைசாலைதான். அந்தந்த நாட்டு சட்டங்களுக்கு ஏற்ப, அவர்கள் செய்த தண்டனைகளை பொறுத்து, அவர்களுக்கு சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது. பொதுவாக சிறைச்சாலை என்பது ஒருவர் செய்த தவறை உணர்ந்து, திருந்தி வாழ வாய்ப்பை வழங்கும் இடம் என்று கூறுவார்கள்.

ஆனால் சிறைச்சாலைகள் அப்படி இருக்கின்றனவா என்றால் இல்லை என்பதே அனைவரின் பதிலாக இருக்கும்.

இந்தியாவைப் பொறுத்தவரை எவ்வளவு பெரிய குற்றங்கள் செய்திருந்தாலும் செல்வாக்கு மிகுந்தவராக இருந்தால் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம். அதையும் மீறி தண்டனை கிடைத்தாலும் அவர்களின் செல்வாக்கு காரணமாக சிறையிலும் அவர்களுக்கு அனைத்து வசதிகளும் கிடைக்கிறது.

ஆனால் எந்தவித செல்வாக்கும் செல்லாத சில சிறைச்சாலைகள் உலகில் இருக்கின்றன. இங்கு கைதிகளுக்கு இருக்கும் கட்டுப்பாடுகளும், வழங்கப்படும் தண்டனைகளும் மிகவும் கடுமையானவையாக இருக்கும்.

இந்தப் பதிவில் உலகின் அதிபயங்கரமான சிறைச்சாலைகள் என்னென்ன என்று பார்க்கலாம்.

**பிளாக் டால்பின் சிறைச்சாலை, ரஷ்யா:-**

ரஷ்யாவில் உள்ள இந்த சிறைச்சாலையில் மிக மோசமான கொலைகாரர்கள், கற்பழிப்புக் குற்றவாளிகள் மற்றும் நரமாமிசம் சாப்பிடுபவர்கள் போன்றோர் அடைக்கப்படுகின்றனர். இந்த சிறையில் கைதிகள் பகலில் உட்காரவோ, ஓய்வெடுக்கவோ அனுமதிக்கப்படுவதில்லை. இங்கிருக்கும் குற்றவாளிகளின் இயல்புக்கு ஏற்ப இங்கிருக்கும் வார்டன்களும் மிருகத்தனமானவர்களாக இருப்பார்கள். தூங்கும் நேரம் தவிர இங்கிருக்கும் கைதிகள் அனைவரும் வேலை செய்து கொண்டே இருக்க வேண்டும். பெரும்பாலும் இங்கிருக்கும் கைதிகள் கண்கள் கட்டப்பட்ட நிலையில் மனஅழுத்தம் நிறைந்த சூழ்நிலையிலேயே வைத்திருக்கப் படுகிறார்கள்.

**பெட்டக் தீவுச் சிறை, ரஷ்யா:-**

உலகின் மிகவும் ஆபத்தான வன்முறை கும்பலான MS 13 இந்த சிறையில்தான் உள்ளது, மேலும் இவர் கள் அளவிற்கு ஆபத்தான பேரியோ 18 கும்பலும் இங்குதான் அடைக்கப்பட்டுள்ளது. இந்த சிறைக்குள் காவலர்கள் நுழையவே அஞ்சுவார்கள். பச்சைக் குத்திய இந்த இரண்டு கும்பல்களுக்கு இடையில் அடிக்கடி வன்முறைகள் ஏற்படும். இவர்களின் வன்முறையில் பல ஆயுதமேந்திய காவலர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.









**டாட்மோர் சிறை, சிரியா:-**

டாட்மோர் உலகின் மிக மோசமான சிறைச்சாலைகளில் ஒன்றாகும். இந்த சிறைச்சாலையின் சுவர்களுக்குள் துஷ்பிரயோகம், சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற நடவடிக்கை ஆகியவை மிகவும் சாதாரணமாக நடக்கும். இந்த சிறையில் இருந்து வெளியே செல்பவர்கள் வாழ்நாள் முழுவதும் இங்கு அனுபவித்த சித்திரவதைகளை மறக்க முடியாது. கைதிகளை தரையில் இழுத்து செல்வது, கோடரியால் துண்டு துண்டுகளாக வெட்டுவது போன்ற சித்திரவதைகள் இங்கு செய்யப்படும். ஜுன் 27, 1980 அன்று இந்த சிறையில் ஒரே நாளில் 1000 கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

**காமிட்டி சிறை, கென்யா:-**

இந்த சிறையில் இருக்கும் அதிகபட்ச நெரிசல், வெப்பமான சூழ்நிலை, தண்ணீர் பற்றாக்குறை மட்டுமின்றி இங்கு நடக்கும் வன்முறைகளுக்காகவும் இந்த சிறை மிகவும் புகழ்பெற்றதாகும். கைதிகளுக்கு இடையேயான சண்டைகள் மற்றும் வார்டன்களின் கடுமையான தாக்குதல்கள் என இங்கு ஆண்டுக்கு பல கைதிகளின் உயிர்கள் பறிபோகின்றன. கற்பழிப்பு குற்றங்களும் இந்த சிறையில் அதிகம் அரங்கேறுகிறது.

**லா சபனேட்டா சிறை, வெனிசுலா: -**

இந்த சிறை குறைவான ஊழியர்களையும், அளவிற்கு அதிகமான கைதிகளையும் கொண்டது, இது மிகவும் ஆபத்தான 'கொம்பினேன்' ஆகும். இந்த சிறையில் வன்முறை மற்றும் கற்பழிப்பு என்பது மிகவும் சாதாரணமான ஒன்றாகும். 1995இல் ஒரே நாளில் 200 கைதிகள் இந்த சிறையில் கொல்லப்பட்டனர். இங்கிருக்கும் கைதிகள் அனைவரிடமும் கத்தி இருக்கும். இந்த சிறையில் மறுவாழ்வு என்பதைக் காட்டிலும் உயிர்வாழ்வது என்பதே மிகவும் கடினமான ஒன்றாகும்.

**யூனிட் 1391, இஸ்ரேல்:-**

மிகவும் இரகசியமான இந்த தடுப்பு மையம் 'இஸ்ரேலிய குவாண்டனாமோ' என்று அழைக்கப்படுகிறது. இந்தச் சிறையில் கொந்தளிப்பான அரசியல் கைதிகள் மற்றும் அரசின் பிற எதிரிகள் அடைத்து வைக்கப்படுகிறார்கள். இங்கு இவர்களுக்கு நடத்தப்படும் கொடுமைகளைக் கூற இயலாது. இந்த சிறைச்சாலை பெரும்பாலும் ரேடாரால் பாதுகாப்படுகிறது. நவீன வரைபடங்களில் இருந்து இந்த இடம் அகற்றப்பட்டுள்ளதால் உலக நாடுகளில் பலருக்கும் இந்த இடத்தைப் பற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லை. சித்திரவதை மற்றும் மனித உரிமை மீறல் இங்கே சாதாரணமானது.

**கிடாராமா மத்திய சிறை, ருவாண்டா:-**

600 பேர் இருக்க வேண்டிய இந்த சிறைச்சாலையில் 6000 பேர் இருக்கின்றனர். பூமியின் நரகமாக கருதப்படும் இந்த சிறைச்சாலையில் மனிதர்கள் கால்நடைகள் போலவே நடத்தப்படுகின்றனர். இங்குள்ள ஆபத்துகளும், நோய்களும் சாதாரண மனிதர்களால் கற்பனை செய்யக்கூட முடியாதவை ஆகும்.

**ஏ்மீ புளோரன்ஸ், அமெரிக்கா -**

சூப்பர்மேக்ஸ் சிறை என்று அழைக்கப்படும் இது மிகவும் ஆபத்தான கைதிகளை அடைத்து வைக்கப் பயன்படுகிறது. இது தீவிர கண்காணிப்பும், கடினமான கட்டுப்பாடுகளும் இருக்கும் சிறையாகும்.கைதிகள் ஒருநாளைக்கு 23 மணிநேரம் தனிமைச் சிறையில் இருக்க வேண்டும் மற்றும் கட்டாய உணவு மற்றும் தற்கொலை சம்பவங்கள் மிகவும் அதிகம். இந்த வகையான சிகிச்சையானது கைதிகளுக்கு கடுமையான உளவியல் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது.





**பேங் குவாங் சிறை, பாங்கொக்: -**

நாட்டின் புனிதத்தன்மைக்கு ஆபத்தாக கருதப்படும் கைதிகள் இந்தச் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். இந்த சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு கிண்ணம் அரிசி சூப் மட்டுமே வழங்கப்படுகிறது. மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு கணுக்காலை சுற்றி இரும்புக் குண்டுகள் கட்டப்பட்டிருக்கும்.

*

# கிராம மட்ட வேலைத்திட்டங்கள் குறித்து மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார் மாவட்டத்தில் இவ்வருடம் மாவட்ட ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் மேற்கொள்ளவேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கும் ஒன்றுகூடல் நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட காரியாலயத்தில் இடம்பெற்றது.

மன்னார் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர் பெனடிற் குரூஸ் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தச் சந்திப்புக்கு நேசக்கரம் பிரஜைகள் குழுவின் தலைவர் பி.எஸ்.அன்ரன் தலைமை தாங்கினார்.

இந்த ஒன்றுகூடலில் கிராம ரீதியாக இயங்கி வரும் பெண்கள் அமைப்புக்கள் மற்றும் நேசக்கரம் பிரஜைகள் குழு அங்கத்தவர்கள் ஊடாக 2020 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட இருக்கும் கிராம, பிரதேச மட்டச் செயற்பாடுகள், உள்ளக அபிவிருத்தி சமூக சேவைச் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்தாலோசிக்கப்பட்டது.

அத்துடன் கிராம மட்டத்தில் செய்யப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான குறைபாடுகளை இனம்கண்டு அவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய பிரதேச சபை மற்றும் நகர சபை உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களுக்குத் தெரியப்படுத்தும் முகமாக ஏற்பாடு செய்யப்படவுள்ள பொதுக் கலந்துரையாடல் தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் சாந்திபுரம், ஜீவபுரம், ஜிம்ரோன் நகர், பள்ளிமுனை பகுதிகளைச் சேர்ந்த பெண்கள், நேசகரம் பிரஜைகள் குழுவின் அங்கத்தவர்



கள், வடக்கு மாகாணக் கடற்தொழிலாளர் இணையத்தின் செயலாளர் மற்றும் மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அதிகாரி மேரி பிரியந்தா உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# பல இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த வலம்புரிச் சங்குகளுடன் ஒருவர் கைது





மட்டக்களப்பு, ஜன. 19

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பல லட்சம் ரூபா பெறுதியான பெருமளவு வலம்புரிச் சங்குகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்தே நீர்கொழும்பைச் சேர்ந்த ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட பிரதிப்பொலிஸ் அத்தியட்சகர் எம்.என்.எஸ்.மெண்டிஸ், மட்டக்களப்பு பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் குமாரசிறி ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி ஹெட்டியாராட்சியின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் இவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது பயணப்பையில் இருந்து 19 வலம்புரிச் சங்குகள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட வலம்புரிச் சங்குகள் வியாபார நோக்கில் நீர்கொழும்பில் இருந்து மட்டக்களப்பு கொண்டுவரப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் தொடர்பில் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

# வீட்டினுள் புகுந்து கத்திமுனையில் 8 பவுண் தங்க நகைகள் கொள்ளை

## புலோலியில் வெள்ளி இரவு சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன.19

வீடு புகுந்த கொள்ளையர்கள், வீட்டில் உள்ள வர்களை கத்தி முனையில் அச்சுறுத்தி எட்டுப் பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்துத் தப்பித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் பருத்தித்துறை புலோலியில் இடம் பெற்றதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில், உரிமையாளர்கள் இருந்த வேளை, இரவு ஏழு மணியளவில் முகத்தைத் துணிகளால் மறைத்துக் கட்டிக் கொண்டு உள்புகுந்த மூவர், கத்தியைக் காட்டி அச்சுறுத்தி, வீட்டில் இருந்தவர்கள் அணிந்திருந்த நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ - 07)



# பொதுத் தேர்தலை வழிநடத்தும் பொறுப்பை கருவிடம் ஒப்படைக்கத் தயாராகிறார் ரணில்!

## சஜித் அணிக்கு செக் வைப்பதற்கு இந்தத் திட்டம்

கொழும்பு, ஜன. 19

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயக தேசிய முன்னணிக்குத் தலைமை தாங்கி வழிநடத்தும் பொறுப்பை சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் வழங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

அதற்கான அழைப்பை ரணில் இவ்வாரம் விடுப்பாரென்றும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் சபாநாயகர் கரு இந்தத் தலைமையை ஏற்கும் சாத்தியங்கள் இருக்கின்றன எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேபோல் கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் 96 பேரின் பதவிக்காலம் முடிவடைவதால் புதிய நியமனங்களை வழங்கவும் தீர்மானித்துள்ள ரணில், நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் அதனை மேற்கொள்வாரெனத் தெரிகிறது.

ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் செயற்பட ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் தீர்மானம் எடுத்துள்ள நிலையில் ரணிலின் இந்தத் தீர்மானம் வெளிவந்துள்ளது.

இது ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாக சபை மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவு. கட்சித் தலைமைக்கு எதிராக கடந்த காலங்களிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஜே .ஆர்.ஜெயவர்தனவுக்கு எதிராக ருக்மன் சேனநாயக்க, பிரேமதாஸவுக்கு எதிராக லலித் அத்துலத்முதலி ,காமினி திஸாநாயக்க ஆகியோர் கிளர்ச்சிகளைச் செய்தாலும் கட்சித் தலைமைத்துவத்துவத்திற்குப் பாதிப்பு ஏற்படவில்லை. இந்த முறை அவ்வாறே நடக்கும். எனவே ரணில் இந்தச் சலசலப்புக்கு அஞ்சப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் கட்சியின் சில தொகுதிகளுக்கு புதிய அமைப்பாளர்களை நியமிக்க ரணில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறாரென மேலும் அறியமுடிந்தது. (ஐ)

# தென்பகுதி கடைகளில் மரக்கறித் திருடர்கள்

## பொலிஸ் விசேட விசாரணை

கொழும்பு, ஜன. 19

காலி ,பத்தேகம நகரிலுள்ள கடைகளில் லட்சக்கணக்கான பெறுமதிவாய்ந்த மரக்கறிகள் திருடப்பட்ட சம்பவம் குறித்து பொலிஸ்விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சந்தையில் மரக்கறி விலை அதிகரிப்பினையடுத்து இந்த திருட்டு இடம்பெற்றுள்ளது.

கடந்த வியாழன் இடம்பெற்ற இந்த திருட்டுச் சம்பவத்தில் ஒரு கிலோ 400 முதல் 500 ரூபா வரையான விலைகளில் தற்போது சந்தையில் விற்கப்படும் கரட் ,லீக்ஸ் போன்ற மரக்கறிகளேதிருடப்பட்டுள்ளனஎனவர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேபோல சந்தையில் கிலோ 750 முதல் 800 ரூபா வரையானவிலைகளில்விற்கப்படும் பெரிய வெங்காய மூடைகளும் திருடப்பட்டுள்ளன எனச் சொல்லப்படுகிறது. சுமார் இரண்டு லட்ச ரூபாவுக்கும் அதிகமான நட்டம் இதனால் ஏற்பட்டுள்ளதாகவர்த்தகர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

### ரஞ்சன் தொலைபேசி உரையாடல்;

# மற்றுமொரு நீதிவானும் இடைநிறுத்தப்படுவார்?

கொழும்பு, ஜன. 19

சர்ச்சைக்குரிய வழக்குகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் தொலைபேசியில் உரையாடியதன் மூலம் நீதித்துறைக்கு இழுக்கை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் மற்றுமொரு நீதிவான் சேவையிலிருந்து இடைநிறுத்தப்படும் சாத்தியங்கள் உள்ளன என நீதித்துறையின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே ரஞ்சனுடன் உரையாடி வழக்கு விடயங்கள் குறித்து பேசிய காரணத்திற்காக பத்தேகம நீதிவான் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டார்.

இந்நிலையில் ரஞ்சனுடன் தொலைபேசியில் பேசிய மற்றுமொரு நீதிவான் கிஹான் பிலப்பிட்டியவும் சேவையில் இருந்து இடைநிறுத்தப்படும் சூழ்நிலை எழுந்துள்ளது.

நீதிமன்ற விடயங்களில் அரசியல் தலையீடு இருப்பதாக ஏற்கனவே கிஹான் பிலப்பிட்டிய நீதிச் சேவைகள் ஆணைக் குழுவுக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளமையால், அதுகுறித்து பரிசீலனை செய்துவரும் ஆணைக்குழு அது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் வரை அவரை சேவையில் இருந்து இடைநிறுத்தக் கூடுமெனத் தெரிகிறது. (ஐ)

# இன்னும் 10 ஆண்டுகளில் தமிழர் இருப்பு சந்தேகமே!

## சிவாஜிலிங்கம் ஆருடம்



2035 ஆம் ஆண்டளவில் தமிழர் பற்றி பேச முடியாத நிலைமைகூட வந்துவிடுவதற்கு வாய்ப்பு உள்ளதெனத் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தன்னிச்சையான போக்குதான் மாற்று அணிகள் உருவாகுவதற்குக் காரணம்.

புதிய கூட்டணிக்கு தலைமைத்துவச் சபை ஒன்றை உருவாக்குது தொடர்பாக உத்தேசிக்கப்பட்டு வருகின்றது.

அதாவது விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, சுரேஷ் பிரேமசந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசியக் கட்சி, அனந்தி தலைமையிலான ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் என்பனவே தற்போது புதிய கூட்டணி பற்றி பேசி வருகின்றன.

எனினும் அந்தக் கட்சிகளில் ஈழமக்கள் புரட்சிகள விடுதலை முன்னணிக்கு மாத்திரமே அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்ற அந்தஸ்து உள்ளது. அந்தக் கட்சியின் பெயரை மாற்றுவது தொடர்பாக அதன் மத்திய குழுவில் ஆராய்ந்து அனுமதிகளைப் பெற்றுகொண்ட பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் அனுமதி கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு அதற்கான அனுமதியை வழங்கிய பின்னரே புதிய கூட்டணி நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும். அந்தக் கூட்டணிக்கான ஒப்பந்தம் எதிர்வரும் 19ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக இடம்பெறுவதற்கு வாய்ப்புள்ளது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தன்னிச்சையான போக்கே புதிய கூட்டணி உருவாகுவதற்குகாரணமாகும். மேலும் 2035ஆம்ஆண்டளவில் தமிழர் பற்றி பேச முடியாத நிலைமைக் கூட வந்துவிடுவதற்கு வாய்ப்புள்ளது – என்றார்.

# மாந்தையில் வீரவன்ஸ

மன்னார், ஜன. 19

மன்னார் பெரியகடைப் பகுதியில் அமைந்துள்ள மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்திற்கு (மாந்தை சோல்ட் லிமிற்றெற்) அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் திடீர் விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது, உப்பு உற்பத்தி நிலையத்தைப் பார்வையிட்ட அமைச்சர் அங்குள்ள பிரச்சினைகள், குறைபாடுகளை கேட்டறிந்து கொண்டார். மேலும் உப்புப் பொதி செய்யும் பகுதிக்கும் சென்று பார்வையிட்டார்.

இந்த விஜயத்தின்போது, அங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்கள் தமது பிரச்சினைகளை அமைச்சரிடம் நேரடியாக தெரிவித்தனர்.

குறிப்பாக அந்த உப்பு உற்பத்தி நிலையத்தில் அதிகமான பெண் ஊழியர்களே கடமையாற்றுகின்றனர் என்றும், கடினமான வேலைகளை தாங்களே செய்வதாகவும் அவர்கள் தெரியப்படுத்தினர். குறித்த பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்ட அமைச்சர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

(மற்றொரு செய்தி 04 ஆம் பக்கத்தில்)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.



வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், துபார்க்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.01.2020இல் வெளியிடப்பெற்றது.